AKARAM

இலவச தமிழ் மாத இதழ்

# அகரம்

## 100 இதழ்

சுவடி : 8.4 திருவள்ளுவர் ஆண்டு 2051

www.akaram.eu

FREE Magazine

ISSN : 2195-6480

14.08.2019 - 13.09.2019



## தேர்தலா மோதலா

தயாராகும் சர்வ தேசங்களின் வியூகங்கள்!

## அன்று தேசியத்தலைவர் உருவாக்கிய கூட்டமைப்பு அல்ல இது

திரு.கஜேந்திரகுமார்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA



TKS BEST FOODS
DORTMUND மாநகரில்
மளிகை உலகின்
BIGG BOSS
5th ANNIVERSARY
ஒரு நாள் மட்டும்!
விழாக்காலப் பிரமாண்ட விற்பனை....
05.10.2019
நீங்கள் நம்பமுடியாத மாபெரும் விலைச்சலுகைகள் மற்றும்
குலுக்கல் முறையிலான (நம்பமுடியாத) பரிசுப் பொருட்களும்.....!
BIG SALE
ONE DAY
100€ க்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கான
குலுக்கல் முறையிலான பரிசில்கள்
இலங்கை/இந்தியா விமானச்சீட்டு
தொலைக் காட்சிப் பெட்டி
Mixer Grinder
Rice Cooker
புட்டுப் பானை
Aachi
Rabeena
TKS BEST FOODS
TRS ASIA'S FINEST FOODS
Tilda
0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods
Rheinische Str. 79, 44137, Dortmund Germany

# DER VERBESSERTE SUPER-TARIF




**ortel MOBILE**

ஒரே சிம்மில் இருந்து...
யேர்மனிக்கு முற்றிலும்
**இலவசம்**

**NEU: Deutschland Flat**

- 250 Minuten aus Deutschland in 50 weitere Länder
- Internet Flat ~~4GB~~ 5GB
- Surfen & Telefonieren in der EU
- Deutschland Flat

ஐரோப்பா, இந்தியா மேலும் பல
நாடுகளுக்கு 250 நிமிடங்கள்
**4GB Internet**




ஐரோப்பிய நாடுகளில் இருந்து
பயன்படுத்தலாம். 4GB முடிந்தால் மீண்டும்
9 யூரோக்களுக்கு பெற முடியும்

**19,99 €** [15) /4 Wochen

### Smart World L

Surfen und günstig ins Ausland telefonieren

- 250 Minuten aus Deutschland in 50 Länder
- Internet Flat bis 4 GB
- Surfen und günstig Telefonieren in der EU
- Deutschland Flat

19 99 € /4 Wochen (*)

Zur Smart World L

### Allnet Flat L

Günstig telefonieren und surfen

- Deutschland Flat
- Internet Flat 7 GB
- Surfen und günstig telefonieren im EU-Ausland

24 99 € /4 Wochen (*)

Zur Allnet Flat L

### Internet Flat L

Entspannt surfen

- Internet Flat 5,5 GB
- Surfen in der EU
- Günstig surfen in Deutschland und der EU

19 99 € /4 Wochen (*)

Zur Internet Flat L







**Nur Festnetz




AKARAM
# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14.ஆவணி 2019 13 - புரட்டாசி 2019
சுவடி / ISSUE 8.4



**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)



**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. BOX 4153, 59037 Hamm**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu



ISSN 2195-6480

www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.


# நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும்**
**விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும்**
**அன்பு நிறைந்த வணக்கம்.**

**நூறாவது இதழ் வெளிவரும் இத்தருணத்தில் எம்மோடு இணைந்து, பல வகையில் பயணித்த அத்துணை நட்புக்களையும் நன்றியுணர்வுடன் நினைத்து பார்க்கின்றோம்.**

இலங்கையில் இந்த ஆண்டைப் போல வேறு எந்த ஆண்டிலும் இந்த அளவுக்கு அரசியலில் பரபரப்புகள் இருந்திருக்க முடியாது என்பதை, இலங்கை அரசியலை அவதானிக்கும் எவரும் மறுக்கார். தினம் ஒரு அரசியல் குண்டை அதிபர் மைத்திரி முதல், அடிமட்ட அரசியல்வாதி வரை செய்திகளாக மக்களிடையே ஏற்படுத்தி வருகிறார்கள்.

இஸ்லாமியப் பயங்கரவாதிகளின் 'உயிர்த்த ஞாயிறு' குண்டுத் தாக்குதல்களும், அவை ஏற்படுத்தி வரும் பரபரப்புச் செய்திகளும், அவற்றுக்கு அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள் ஆற்றிவரும் எதிர் வினைகளும் எல்லா மக்களையும் குழப்பத்திலும், பீதியிலும் கலங்க வைத்து வருகின்றன.

நாட்டில் தேர்தல் காய்ச்சல் பலமாக பரவி நிற்கிறது. மைத்திரியின் மீண்டும் போட்டியிடும் ஆசையால், அதனை மகிந்தர் வரவேற்றார் ஏனென்றால், அடுத்த தேர்தலில் அவரது மகன் நாமலுக்கு போட்டியிடும் வயது வந்து விடும். நாட்டை ஆளும் உரிமை தமது குடும்பத்தில் தொடர முடியும் என்று கணக்கும் போட்டார்.

மைத்திரிக்கும், மகிந்தவின் ஆதரவுடன் தேர்தலை வென்று விடலாம் என திடீர் பிரதமராக்கியும் பார்த்தார். ஆனால், ரணில் விடுவதாக இல்லை. மைத்திரியைப் பயன்படுத்தி,

தமக்கு எதிரான எல்லா ஊழல் வழக்குகளையும் செயலறச் செய்து தப்பிக்க மைத்திரி உதவ, அவரது ஆதரவுடன் தேர்தல் வெற்றியைக் காணக் கண்ட கனவு எல்லாம் வீணாகிப் போவதை அவரால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

அவரது கட்சிக்குள் அவருக்கு ஆதரவே இல்லாத நிலையில், தன்னைத் தவிர கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிடுவதை அவரால் ஏற்க முடியவில்லை. இடையே பலர் தாமாகவே போட்டியிடப் போவதாக செய்திகளை விட்டுப் பார்த்தும் பலன் இல்லை. முடிவில் சஜித் பிரேமதாசா போட்டியிடுவதாகத் தன்னிச்சையாகவே அறிவித்து விட்டார்.

எல்லாரையும் முந்திக் கொண்டு அறிவித்த கோட்ட பாயாவை, அவர் அண்ணன் மகிந்தரே நம்பி ஆதரவளிக்கத் தயங்கி வருகிறார். அந்த பிளவுக்குள் ரணில் புகுந்து, பிரதமர் பதவியைப் பெற்று விடும் ஆசையில் அமெரிக்க குடி உரிமையைத் துறந்து கோட்டபாயா போட்டியிட அரசுமட்டத்தில் செயற்பட்டு வருகிறார். ஆயினும் அமெரிக்காவின் இறுதியான அறிவித்தலிலும் கோட்டாவின் பெயர் இடம் பெறவில்லை. அதனால் சட்டப்படி அவரால் போட்டியிட முடியுமா? என்ற கேள்வி நீதிமன்றத் தீர்ப்புக்காகக் காத்திருக்கிறது.

மைத்திரியின் நீதிமன்ற வழக்கு, தேர்தல் கால எல்லை தொடர்பாக இன்னமும் தீர்ப்புக்காகக் காத்திருக்கிறது. அதனால் மகிந்தரே மீண்டும் போட்டியிட முடியும். அப்படியானால் களத்தில் குதிக்கும் கனவில் இருக்கிறார். இதற்கிடையே ஜனதா விமுக்திப் பெரமுன (ஜே.வி.பி.) தனது போட்டியாளரை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளது.

“பழைய குருடி, கதவைத் திறடி” என்ற கதை போல, ரணில் யாழ்ப்பாணம் போய் அடுத்த 6 மாதங்களுக்குள் வடக்கில் நிறைவேற்றப்படாத அரச அபிவிருத்திப் பணிகளையும் முடித்துத் தருவதாக ஆசை காட்டி உள்ளார். பலாலி விமான நிலையத்தை, சர்வதேச விமான நிலையமாக திட்டம் போட்டு விட்டுப் போனார் என விஜயகலா புகழாரம் பாடுகிறார். பலாலி மக்களின் விவசாய குடியிருப்பு நிலங்களை இராணுவம் இன்னமும் விடுவிக்காத நிலையில் அபிவிருத்திக்கான தேர்தல் வருகிறதாம்.

ரணிலும், சுமந்திரனும் குருநகரில் நடத்திய பொது விழாவில் சுமந்திரன் அரசியல் தீர்வுக்காக, இத்தனை காலம் அரசை ஆதரித்தோம். அதற்கு ரணில் என்ன தந்தார்? என தூபம் காட்ட, ரணிலும் எல்லாம் தயார். ஆனால்,



நிறைவேற்றத் தேவையான பெரும்பான்மை இல்லை. மற்றப்படி நான் செய்து முடிப்பேன் எனப் பஞ்சாராத்தி காட்டி பரவசப் படுத்திப் போனார்.

இதில் ரணில் கட்சித் தலைவர் சுமந்திரன் அவரது கட்சியின் ஆயுட்கால உறுப்பினர். இரண்டு பைத்தியங்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள்.

பைத்தியங்களை நம்பும் பைத்தியங்களாகத் தமிழ் மக்கள் வாழத்தான் வேண்டுமா?

ஊரார் பசியைப் போக்கினால் மட்டும் தன்பசி போய்விடாது என்பதால், அகரம் தனது பசியைச் சொல்லி அழும் உரிமையை எடுத்துக் கொள்கிறது.

**ஆசிரியர், அகரம் குழுமம்**


# தேர்தலா மோதலா?

## தயாராகும் சர்வ தேசங்களின் வியூகங்கள்!

2015 ஜனவரி 8ந் திகதி நடத்தப்பட்ட தேர்தலே, சர்வதேச அரசுகளின் ஒரு நீண்ட செயல் திட்டத்தின் தொடக்கப் புள்ளிதான். சிங்கள தமிழ் இனப் பிரச்சினையை எப்படித் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்ற உலக அரசுகளின் முயற்சியைச் சிங்களத் தலைமைகள் தமக்குச் சாதகமாகப பயன்படுத்தலாம் என்பதே இலங்கை ஆட்சியாளரின் உளக் கிடக்கை. இலங்கையில் ஸ்ரீமாவோவின் ஆட்சியின் பொழுது திரிகோணமலைக் கடற்படைத் தளம் பிரித்தானியாவிடம் இருந்து முற்றிலுமாகப் பெறப்பட்டதின் பின்னர், அகற்றிவிடும் திட்டம் நிறைவேற்றப் பட்டது. ஆனால், தலைவலி போகத் திருகு வலி வந்தது போல, அடுத்து ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாவோ மிச்சமாக பிரித்தானியாவிடம் இருந்த திருமலைக் கடற்படைத் தளத்தையும் பறித்து எடுத்ததோடு, சீனாவின் பக்கமாக சாய்ந்தும் விட்டார். அது இன்று வரை நீடிக்கிறது.

அக்காலத்தில் உலகம் அமெரிக்கா, ரஷ்யா என்ற நாடுகளின் இரு துருவ ஆட்சி அதிகாரத்தில் இருந்த படியால், ரஷ்யாவின் பின்புலத்தில் சீனா இருந்த காரணத்தால்,





அதனைப் பெறுவதில் உலக வல்லரசுகள் பெரும் போட்டியில் இறங்கின.

பண்டார நாயக்காவின் ஆட்சிக் காலத்திலே பிரித்தானிய அமெரிக்க முதலாளிகளின் தேயிலை, இரப்பர் தோட்டங்களையும், வங்கிகள், வியாபார நிலையங்களையும் அரசுடமை ஆக்கியதன் மூலம் இலங்கை முழுமையான பொதுவுடமை நாடாக மாறிவிடும் என்ற அச்சத்தை, உலக நாடுகளுக்கு ஏற்படுத்திய காரணத்தால், அவரை நிரந்தரமாக அதனோடு நெருக்கமான உறவை வைத்திருந்த ஸ்ரீமாவோவின் ஆட்சியை அமெரிக்கா எதுவும் செய்ய முடியாத நிலையில் இருந்தது. திருமலைக் கடற்படைத் தளத்தை பிரித்தானியா மீளக் கையளித்து விட்டு வெளியேறியதும், இலங்கை பலவித நெருக்கடிகளைச் சந்தித்த காரணத்தால் ஸ்ரீமாவோவின் ஆட்சி படுதோல்வி அடைந்து, அமெரிக்க ஆதரவு ஜே.ஆர்.அசுர பலத்துடன் ஆட்சிக்கு வர முடிந்தது. முதலில் அமெரிக்கா சீதுவையில் 'அமெரிக்காவின் குரல்' *(Voice of America)* இருபது வருடக் குத்தகையில் 1,000 ஏக்கர் நிலத்தில் நிறுவியது.

அது வெறும் வானொலி நிலையமாக இல்லாமல், தென் கிழக்காசிய பிராந்தியம் முழுவதும் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் மற்றும் போர்க் கப்பல்களுடன் தொடர்பு கொள்ளவும், கட்டளை பிறப்பிக்கவும், பிற நாடுகளை வேவு பார்க்கும் வசதிகளையும் கொண்டுள்ளதாக அறியப்படுகிறது. எனவே, இலங்கை

த. எதிர்மன்னசிங்கம்

அரசியலில் இந்திரா காந்தி காலத்திலேயே இலங்கையின் உள் நாட்டு அரசியலில் தமிழ் இளைஞர்களின் அரசியல் போராட்டமாக மடைமாற்றி தடுத்து விட்டது. இறுதியில் தமிழ் இன அழிப்பில் முழு நாட்டையும் தன் வசமாக்கும் பணியில் வெற்றியும் கண்டுவிட்டது.

ஆனால், ஸ்ரீமாவின் மகள் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் நீலன், திருச்செல்வம், லக்ஷ்மன், கதிர்காமர் என்கிற இரு மக்களால், தெரிவு செய்யப்படாத இரண்டு விபீடணர்களின் தயவால், புலிகள் இயக்கத்தை அழிக்க அமெரிக்காவை சந்திரிகா களமிறக்கினார். அதனால் அமெரிக்காவும், சிங்களமும் வெற்றி கண்டன. ஆனால் அப்பம் பங்கிட முயன்ற குரங்கு இன்று சீனா, அமெரிக்கா என்கிற இரண்டு பலவான்களோடு தமிழரின் வளங்களையும், நிலங்களையும் கொள்ளை அடிக்கும் வேலையைச் செய்கிறது. அமெரிக்காவுக்கு கோட்டபாயா ரெடி இந்தியாவுக்கும், சீனாவுக்கும் கை கொடுக்க யார் வருவார்... மைத்திரியா?

நடக்கப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் கோட்ட பாயாவை வெல்ல வைத்து, அவரை கொண்டு இலங்கையைத் தனது கைக்குள் போட்டு விட அமெரிக்கா முற்படுகிறது. மகிந்தருடன் கூட்டு வைத்தால் வெல்ல முடியாது என்பதும், வென்று விட்டால் பதவியை மகன் நாமல் பெறுவது முடியாமல் போய்விடும் என்ற சந்தேகமும், மகிந்த கோட்ட பாயா கூட்டணியை சாத்தியம் அற்ற தாக்கியதால் கோட்டாவின் கவனம் ரணிலின் பக்கம் திரும்பி, அவரைப் பிரதமராக்கும் ஆசையைக் காட்டிப் பேச்சுகள் நடக்கின்றன.

தோல்விகளின் நாயகனான ரணிலுக்கு, கட்சி சார்பில் போட்டியாளரை நிறுத்தி, வெற்றி பெற்றாலும் பிரதமர் பதவி பறிபோவது உறுதி எனத் தெரிவதால், கோட்டாவின் 'டீலிங்' நிரம்பவே பிடித்து விட்டதால், கட்சி சார்பில் யாரையும் நிறுத்தத் தயங்குகிறார். இந்த இழுபறிக்கு முடிவாக, முன்னாள் பிரதமர் சஜித் பிரேமதாச தன்னிச்சையாக தாம் போட்டியிடப் போவதாக அறிவித்தும் விட்டார்.

இத்தகைய நிலையில், கட்டியிருந்த பட்டு வேட்டியும் பறி போய், தமிழ் மக்களின் ஆதரவு என்ற ஜட்டியையும் இழக்கும் ஆபத்தில் விக்கி, டக்கி என்கிற இரண்டு தாடிக்காரரர்களில் எந்தத் தாடியைப் பிடிக்கலாம்? என்கிற டக்கியின் பக்கம் சாய்ந்து விடலாமா? என்கிற சபலத்தில் சம்பந்தன், சுமந்திரன் சோடி தவிக்கிறது. பச்சையில் ஆயுட்கால உறுப்பினரான சுமன் அந்தப் பக்கம் சாயலாமா? எனவும் நினைக்கலாம். யார் நினைப்பு, யார் பிளைப்பைப் பறிக்குமோ? யார் அறிவார்?


GGS
FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607




# யார் ஊடகவியலாளர்?

சுதேச மித்திரன் என்ற இதழில் மகாகவி பாரதியார் பணியாற்றிய காலம், இக்கட்டான சூழ்நிலை மிகுந்திருந்த காலம். அந்நாளில் ஊடகவியலாளர் என வெளியில் சொல்வதற்கே அஞ்சும் அளவிற்கு ஆங்கிலேயரது கொடுமை மிகுந்த ஆட்சிக் காலமாகும். அவ்வாறான நாட்களில் பாரதியாரின் எழுத்துகள் அடங்கிய இதழ்கள் ஆங்கிலேய அரசால் பறிமுதல் செய்யப்பட்டனவாம்.

ஆனாலும் அதற்கு ஒரு பெருமை இருக்கிறது. அவர் ஊடகத்தை ஆங்கிலேயன் அடக்கி ஒடுக்கிய போதும், அவரை ஊடகவியலாளனாக மக்கள் கொண்டாடினர். அவ்வாறான பாரதியின் பெயரை மக்கள் கொண்டாடுவதற்கும், இன்று பல ஊடகங்களையும், பல ஊடகவியலாளர்களையும் மக்கள் கொண்டாட மறுப்பதற்கும்; நிறையவே காரணங்கள் உள்ளன.

ஊடகப்பணி என்பது இலகுவானதல்ல. உண்மை என்ற பெயரில் உலவும் உண்மைக்கு அப்பாலுள்ள கருமை நிறத்தையும், பொய் என்று உருவகிக்கப் பட்ட உண்மையின் உண்மைத் தன்மையையும் நிரூபிக்கும் ஆதார பல முடையவனாக ஊடகவியலாளன் இருக்க வேண்டும். நேர், எதிர்மறை விமர்சனங்களைத் தாண்டி நிற்கும் அடிப்படை மனோதிடம் கொண்டவரே ஊடகவியலாளர் ஆகமுடியும்.

ஊடகக் கற்கை, பன்மொழி ஆற்றல் என்பதெல்லாம் அதற்கு அப்பால் உள்ளவை. அவற்றை எட்டாமலே ஊடகவியலாளராகத் திகழ்ந்தவர்கள் இவ்வுலகில் பலர்.

ஊடகத்துறைக்குள் வரும் ஒருவர், பின்வரும் இரண்டு தெரிவுகளில் ஒன்றைத்தான் தெரிவு செய்யமுடியும் என ஒரு இளம் ஊடகவியலாளரான ஜெரா என்பவரின் கருத்தைக் காண்க.

முதலாவது நிறுவனமொன்றுக்கு அடியாளாக வேண்டும். அதாவது ஒரு நிறுவனத்தின் அரசியல் நிகழ்ச்சி நிரலை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பரப்புரைக்காரர்களாக பணியாற்றுவது முதலாவதாகும். ஈழப் பரப்பில் அநேகமான ஊடகவியலாளர்கள் ஊடக நிறுவனங்களுக்குள்தான் காலத்தைக் கழிக்க வேண்டியிருக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும். தொழில் - மாதாந்த வருமானம் என்று பார்க்கையில் அவர்களுக்கு அதனை விட வேறு தெரிவுகள் இல்லைத்தான். எனவே, கொடுத்த காசுக்கு கூவியே ஆகவேண்டிய இக்கட்டு நிலை.





NEW ARRIVAL
AGAM
Healthy and tasty Foods
அகம்
அகத்தின் சுவை
சமையலில்
தெரியும்
உங்கள் அபிமான
கடைகளில்
பெற்றுக் கொள்ளலாம்.
StaR-Impex
www.star-impex.de

INNENSTADT WEST

ortel MOBILE

# DORTMUND

மாநகரில்

# தமிழர் தெருவிழா 2019

புகழ் பெற்ற பல கலைஞர்கள் சங்கமிக்கும்
மாபெரும் ஆடல் பாடல் கொண்டாட்டம்....

## Straßenfest der Tamilen

## 07.09.2019

11.00 bis 19.00 Uhr

Rheinische Str.
Annenstraße

தமிழர் அரங்கம் | Verein für tamilische Künstler e.V | VMDO Der Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e. V. | HOUSE OF RESOURCES | Tamilischer Kultur Do TKD தமிழர் கலையகம் Bildung Begegnung Beratung | ஜேர்மன் தமிழ் வர்த்தகர் சங்கம் e.V GTVS | comdu.it Deutschland

ஊடகஅனுசரணை

வெற்றிமணி | தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES | அகரம் | IBC தமிழ் | GTV | itn | தமிழ் MTV | STS தமிழ் TV

TamilDealz.com | Lankasri | ETR | tamil.de portal • lifestyle • entertainment

0151 633 633 33 | 0157 735 178 49 | 0177 679 4261 | 0162 803 1647 | 0151 27 990 990

நிறுவனத்துக்கு நீங்கள் காட்டும் விசுவாசத்தின் அடிப்படையில், அனைத்தையும் வருமதிகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம். இந்த ஊடகத்துறையைத் தெரிவு செய்பவருக்கு ஒடுக்கப்படும் மக்கள் குறித்தோ, அடுத்தவரின் சுதந்திரம் குறித்தோ, சுதந்திர மறுப்புக் குறித்தோ எவ்வித அக்கறையும் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. நிறுவனத்துக்கு பணம் குவிவதற்காக பேனாவையும், கேமராவையும் கொண்டு எதையெல்லாம் செய்ய முடியுமோ, அதையெல்லாம் செய்யலாம்.

சுயாதீனமாக செயற்படுவது இரண்டாவதாகும். அதாவது அரசியல் மற்றும் அரசியல் நிகழ்ச்சி நிரல் அளவில் நிறுவன மயப்பட்ட ஊடகங்களுக்குள் இயங்காமல், அதனை விட்டு வெளியே வந்து இயங்குவதைக் குறிக்கும். இதுதான் மிகுந்த சவாலானது. இந்தத் துறை ஊடகவியலைத் தெரிவு செய்யும் உங்களுக்கு நீங்கள்தான் முதலாளியும், தொழிலாளியும். உங்கள் உழைப்பு மட்டுமே மூலதனம். உங்கள் நம்பிக்கை மட்டுமே ஊதியம்.

இந்தத் துறையில் இருப்பவர்களின் முக்கிய தகுதியாக, அதிகாரத் தரப்பினரிடம் கையேந்தா நிலையே இருக்க வேண்டும். ஏனெனில் இங்கு பணியாற்றத் துணியும் நீங்கள், ஒடுக்கப்படும் - சுதந்திர மறுப்புக் குள்ளாக்கப்படும் மக்களின - தரப்பின் குரலாகவே செயற்படுவீர்கள். எனவே உங்களது வாழ்க்கையும், ஒடுக்குமுறைக்குள்ளாக்கப் படுவோரின் வாழ்க்கையும் இரண்டறமானதுதான்.

நீங்கள் அதிகாரத் தரப்பினரிடம் கையேந்தியோ, கடன் பெற்றோ இந்தத் துறையில் இயங்குவீர்களானால், உங்களை நம்பி தங்கள் கதைகளைத் தரும் அப்பாவிகளுக்கு துரோகமிழைத்து விடுகிறீர்கள் என்று அர்த்தம். ஒருவரிடம் கடன் வாங்கிய பின், கையேந்திய பின் அவரை முறித்துக் கொண்டு வெளியில் வந்து எதிர்ப்பதென்பது சாத்தியப் பாடான ஒன்றல்ல. அப்படியே முடிந்தாலும் அது உங்களை அடிக்கடி குற்றவுணர்ச்சிக்குள்ளாக்கும், தலைகுனிவுக்குள்ளாக்கும். இடையறாத, இடையறுந்த நேரடி மறைமுக அவமானப்படுத்தல்களை உண்டு பண்ணும். எனவே, இந்தத் துறையில் நீங்கள் நீங்களாகவே மக்களின் பின் அலைய வேண்டும். உங்களிடம் எந்த வசதியும் மிஞ்சாது.




மேற்கூறிய இரண்டு வகைகளுக்குள்ளும் சிக்காமல், நாடு விட்டு நாடு வந்த ஐரோப்பியத் தமிழர் தரப்பு, ஒரு புதிய வகையறா ஊடகவியலை இப்போது பல இடங்களில் அறிமுகப்படுத்தி வருகிறது. ஒலி வாங்கி கையில் சிக்கிக் கொண்டால் அவர் ஒரு ஊடகவியலாளர், ஏதாவது ஒரு ஒளிப்பதிவுக் கருவிக்கு முன்னால் நின்று கொண்டு இரண்டு வார்த்தைகள் பேசி விட்டால், அவரும் ஊடகவியலாளர். மொழிப் புலமை சிறிதுமற்ற ஒருவர், ஏதாவது ஒரு சமையற் குறிப்பை எழுதி, வலைத்தளத்தில் பதிவிட்டாலும் அவரும் ஊடகவியலாளர். இவ்வாறான ஊடகவியலாளருக்குப் பஞ்சமற்ற ஒரு சமூகமாக தமிழர் தரப்பு வளர்ந்து வருவது, இருதய நோய் வருவதற்குரிய அதிர்ச்சியைத் தந்திருக்கிறது.

ஏதாவது ஓர் ஊடகத்தின் ஒரு பகுதியைத் தக்க வைத்திருக்கக் கூடிய ஆளுமை அற்ற ஒருவரை எவ்வாறு ஊடகவியலாளர் என அழைப்பது? என்பது புரியவில்லை. குறித்த ஓர் பகுதியின் அன்றைய நிகழ்வினைத் தொகுத்து வழங்குபவர் ஊடகவியலாளரா என்றால்? ஆம்! என்பது மகிழ்ச்சிக்குரிய பொய்யாகவும், இல்லை என்பது கசப்பான உண்மையாகவும் இருக்கும். ஊடகம் என்பது வெறுமனே காவுவதோ அன்றி, தொடர்புபடுத்துவதோ அல்ல. தனித்து நின்று கருத்தால் ஒருங்கிணைப்பதே ஊடகம் என்ற பொருளுக்குரியதாக இருக்கும்.


அவ்வாறான ஊடகத்தைத் தாங்குகின்ற நபர் வெளிப்படையாக இயங்குதலில் பல விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும். உண்மையில் அவரே ஊடகவியலாளர். சமூகத்தின் எதிர்கால நகர்வைத் தீர்க்கத் தரிசனமாகக் கூறும் ஆகக்குறைந்த வன்மை ஊடகவியலாளருக்கு இருக்க வேண்டும். அது ஏதுமின்றி ஒருவர் தன்னை ஊடகவியலாளனாக வரித்துக் கொண்டாலோ, அன்றி யாராலேனும் ஊடகவியலாளராக அடையாளப் படுத்தப் பட்டாலோ, அவையெல்லாம் சொற்ப காலத்திற்கான உளக்கிளர்ச்சியைத் தூண்டி விட்டு, அவமதிப்புகளைப் பரிசாகத் தருமே தவிர, வேறேதும் பலனைத் தரவியலாது.

யாரேனும் உங்களை ஊடகவியலாளன் எனத் திடீரென அறிமுகம் செய்தால், உங்கள் உள்ளக்கிளர்ச்சியை அடக்கி விட்டு சற்றுநேரம் ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். சொற்ப நேரத்திற்காவது ஓர் ஊடகத்தின் சுமையைத் தாங்கக் கூடிய வலிமை உங்களுக்கு உண்டாவெனச் சிந்தியுங்கள். விமர்சனங்களுக்கு அஞ்சி, உண்மையை மறைக்காதிருக்கும் மனோபலம் உங்களுக்கு உண்டாவென சற்றுச் சிந்தியுங்கள். ஆகக் குறைந்தது ஐந்து நிமிடங்களுக்காவது உங்களால் உங்கள் தாய்மொழியில், தடையறப் பொருளோடு உரையாட முடியுமாவென எண்ணிப் பாருங்கள்.

இவையெல்லாவற்றின் இறுதியிலும் நீங்கள் வலிமையானவராக உணர்ந்தால், முற்று முழுதாக நீங்கள் ஊடகவியலாளராக மாற முயற்சி செய்யுங்கள். அதாவது தனித்து நின்று கருத்தால் மக்களை ஒருங்கிணைக்க முயற்சியுங்கள். அப்போதாவது, தன்னை ஊடகவியலாளராக அறிமுகம் செய்யாத பாரதியாரை நாம் ஏன் கொண்டாடுகிறோம் என்பதும், பல ஊடகவியலாளர்களை ஏன் எவரும் கொண்டாடவில்லை என்பதும் உங்களுக்குப் புரிந்திருக்கும்.

அப்போதும் புரியவில்லையெனில் நீங்கள் இப்போதும் ஓர் ஊ(ட)கவியலாளரே..!


THOOYA COMMUNICATION




Lyca TV BOX எம்மிடம் கிடைக்கும்

Rheinische Str 80
44137 Dortmund

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**







தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

**மண்மணம் மாறாத சுவைதரும்**
**தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**

மொத்தமாகவும், சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**



# Radio - by - Phone

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்

**00 49 231 700 977 60**

தொலைபேசி இலக்கத்தில்

**ஐரோப்பியத் தமிழ் வானொலி**

அழையுங்கள்!
வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

- 0221 9888014
- 01 80140659
- 044 5133032
- 0330 332 6349
- 0787 72527
- 6474969717
- 5149003078
- 7167480305
- 0280725194



மேலதீக விபரங்களுக்கு...

**www.etr.fm**

இலவச தமிழ் மாத இதழ்

அகரம் 100 இதழ்

www.akaram.eu

# இந்த நூறு வெறும் இலக்கமல்ல! நம்பிக்கையின் அடையாளம்!

# வெற்றியின் உச்சம்!

ஆறு வருடங்களுக்கு முன்னர் நாம் அகரம் சஞ்சிகையை ஆரம்பிக்கும் போது எமக்கு பத்திரிகைத் துறையில் எந்தவிதமான அனுபவமும் இல்லை! பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ள ஜாம்பவான்களே எங்களுக்கு அறிவுரை சொன்னார்கள் "இது தற்கொலைக்குச் சமமானது" என்று!. ஆனால், எங்கள் மனதில் இருந்த ஒரு அசட்டு நம்பிக்கை சொன்னது "முயற்சித்துப் பார்ப்போமே!" என்று. முயற்சித்தோம்... இன்று சிகரத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றோம்...

எங்களின் இந்தப் பயணம் புனிதமானது. ஒரு முனிவரின் பர்ண சாலையைப் போல் எங்கள் எண்ணங்கள் தூய்மையாகவும், இருட்டை விரட்டி, வெளிச்சம் பரப்பும் ஒளிச் சுடர்களைப் போல எங்களது சிந்தனைகள் உண்மையாகவும், கைப்பிடித்த கணவனுக்காக சகலத்தையும் சமர்ப்பித்து விடும் கற்பார்ந்த பெண்களைப் போல எங்கள் நோக்கங்கள் சத்தியவாக்காகவுமே இருக்கின்றது. இதுவே அகரம் 100 என்ற வெற்றியின் ரகசியமாகும்.

பத்திரிகைகள் பாமர மக்களுக்கு பள்ளிக்கூடத்து ஆசிரியனைப் போன்றது! நவீன உலகின் முக்கியமான ஆயுதமாக விளங்கியது பத்திரிகைகள், சஞ்சிகைகளே!. வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் வருவதற்கு முன்னதாகவே தோன்றிய பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு முக்கியமான மூன்று கொள்கைகள் இருந்தன. முதலாவது, பொதுமக்களின் அபிப்பிராயங்களைத் தெளிவாக அறிந்து, அதை வெளிப்படுத்த வேண்டும்.

இரண்டாவது, மக்கள் மனங்களில் விரும்பத்தக்க நல்ல உணர்வுகளை வளர்த்தெடுக்க வேண்டும். மூன்றாவது, மக்களின் குறைகளை எந்தவித அச்சமும் இன்றி பகிரங்கப் படுத்தவேண்டும். இந்த வழித்தடத்தில் அகரம் பயணிப்பதின் அடையாளமே அகரம் 100 என்ற இந்த வெற்றியின் உச்சம்.

நீருக்கு நிறமில்லைத்தான். ஆனால், அது ஓடுகின்ற மண்ணின் சாரத்திற்கு ஏற்ப நிறம் மாறுவது போல பத்திரிகை நடத்துபவரின் எண்ணப் போக்கிற்கு

ஏற்ப மக்களின் சிந்தனைகளை மாற்றி விட முடியும்! ஆனாலும், அகரத்தை ஆரம்பிக்கும் போதே நாங்கள் எங்களுக்குள் ஒரு வரைமுறையை வகுத்துக் கொண்டோம்.

அவை... "பரபரப்புக்காக செய்திகளைத் தயாரிப்பதில்லை, பாரபட்சம் காட்டுவதில்லை, நாகரீகமற்ற இரட்டை அர்த்த சொற்பதங்களைப் பாவிப்பதில்லை, தனிநபர்களை விமர்சனங்கள் செய்வதில்லை, பழிவாங்கும் நோக்கில் மஞ்சள் செய்திகளை அங்கீகரிப்பதில்லை" என்பனவற்றோடு, விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் எமது மக்களுக்கு இனி தாமே இரட்சகர்கள் எனக் கூறிக்கொண்டு, போலி வாக்குறுதிகளைக் கொடுத்து ஏமாற்ற முயல்பவர்களின் முகமூடிகளை உரித்து, அவர்களின் உண்மை முகங்களை வெளிச்சம் போட்டு காட்டவேண்டும் என்று.

அதை சரியான முறையில் செய்து கொண்டும் இருக்கின்றோம் என்பதே இந்த அகரம் 100.

"தீபத்தை வைத்துக் கொண்டு திருக்குறளும் படிக்கலாம்! குடிசையையும் கொளுத்தலாம்!" நாங்கள் ஏற்றி வைத்திருக்கின்ற தீபத்தில் இடம்பெறுகின்ற கட்டுரைகள் அனைத்தும் திருக்குறளைப் போல, எந்தக் காலத்தில் எடுத்துப் பார்த்தாலும், அது அந்தத்தக் காலத்திற்கு ஏற்ற வகையிலான வரலாற்று உண்மைகளையே வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கும்.

பல சாம்ராஜ்ஜியங்களை எல்லாம் சரித்த வரலாறு பத்திரிகைகளுக்கும், புத்தகங்களும்தான் உண்டு!. இவைகள்தான் பிரெஞ்சுப் புரட்சிக்கும், அமெரிக்க விடுதலைப் போருக்கும் அடித்தளமாக அமைத்தன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. வால்டேர் ரூசோவின் எழுத்துக்கள் அச்சு வாகனத்தில் அமர்ந்த பின்னால்தான் பிரான்ஸ் மக்களுக்கு ஆட்சியாளர்களிடம் இருந்த அச்சம் அகன்றது! தாமஸ் ஜெயின், தாமஸ் ஜெபர்சன், பெஞ்சமின் பிராங்க்ளின் போன்ற பேரறிஞர்களின் சுதந்திரச் சிந்தனைகள் அச்சேறியதன்




விளைவாகவே அமெரிக்கர்கள்; அடிமை விலங்கொடிக்க ஆர்வத்துடன் குரல் கொடுத்தார்கள்.

அதே நேரத்தில் எதிர்வினை ஆற்றிய பத்திரிகைகளின் சரித்திரமும் இருக்கின்றது. ஜெர்மனியில் நாசிசத்தைப் பரப்ப ஹிட்லர் முதலில் பத்திரிகையைத்தான் பயன்படுத்தினான்! அவனே ஆசிரியராகப் பொறுப்பேற்று நடாத்திய “வால்கிஷர்” என்ற பத்திரிகை ஜெர்மனிய மக்களின் மனங்களில் நாள்தோறும் இனவெறி என்னும் நஞ்சைப் பரப்பிக்கொண்டே இருந்தது. பாசிசத்தின் தந்தையான முசோலினி ஆசிரியராக இருந்து இத்தாலியின் மிலான் நகரில் இருந்து வெளியிட்ட “இல்.பாப்லோ.டீ இடாவியா” என்ற பத்திரிகைதான் இத்தாலிய மக்களின் இதயங்களில் பாசிச வெறியை வளர்த்தது. மகாத்மா காந்தியை கொன்ற கோட்சே நடாத்திய “இந்து ராஷ்ட்டிரா” என்ற பத்திரிகை மதவாத நெருப்பை வளர்த்தது. இவையெல்லாம் வரலாறுகள்...

அதே நேரத்தில் வரலாற்றின் இன்னொரு பதிவையும் நாம் இங்கு பார்க்க வேண்டும்! அது ருஸ்ய மண்ணின் விடுதலைக்காக மாமேதை லெனின் அவர்கள் போல்ஸ்விக்குகளுக்காக ஜெனிவாவில் இருந்து நடாத்திய பத்திரிகைதான் பாட்டாளி என்னும் பொருள் கொண்ட “பிரோலி டேரியட்” அதுபோல ஐக்கிய இத்தாலியைக் கனவு கண்ட மாஜினி இளைஞர்களுக்கிடையே எழுச்சியை உருவாக்க “யங் இத்தாலி” என்னும் பத்திரிகையையும் லெனின் அவர்கள் ஆசிரியராக இருந்து வெளியிட்டார். (இதன் தாக்கத்தில் தான் இந்திய விடுதலை வேள்வியை வளர்க்க மகாத்மா காந்தி அவர்கள் தான் நடாத்திய பத்திரிகைக்கு “யங் இந்தியா” எனப் பெயரிட்டார்.)

அதுபோலவே ஈழ மண்ணின் விடுதலைக்காக ஐரோப்பிய மண்ணில் இருந்து குரல் கொடுக்கும் அகரம் சஞ்சிகையும் நாளை வரலாற்றில் இடம்பெறும் என்பது சத்தியவாக்கு. நாளை மலரும் தமிழீழ மண்ணின் வெற்றியில் “சீதையை மீட்பதற்கான


**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33**
**0231 950 979 00**

# Swiss Life
## Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

## சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே!

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்

**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch

Cicero Member ID 15787
www.cicero.ch

So fängt Zukunft an.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF















பயணத்தில் இலங்கைக்கு பாலம் அமைக்க இராமருக்கு உதவிய அணிலைப் போல" அகரமும் கண்டிப்பாகப் பேசப்படும்.

நமது மண்சார்ந்த அரசியல், சமூகம், பண்பாடு, அறிவியல், பொருளாதாரம், மருத்துவம் என மக்களின் சிந்தனைக்கும், வாழ்வியலுக்கும் தேவையான அம்சங்களை அது சம்மந்தமான சிந்தனையும், தெளிவும் உள்ள கட்டுரையாளர்களிடம் இருந்து பெற்று, உங்களிடம் ஒப்படைத்த அகரம் இன்று சிங்கநடை போட்டு 100 என்னும் இலக்கத்தை அடைந்து, தனது சிகரத்தை நோக்கியப் பயணத்தை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

எங்களுடைய இந்தப் பயணத்திற்கு அத்திவாரக் கற்களாக இருப்பவர்கள் விளம்பரதாரர்களே! அவர்கள் அகரத்திற்காக வழங்கும் நன்கொடைகள் வெறும் விளம்பரத்திற்காகக் கொடுக்கப் படுபவை அல்ல! தமிழீழ மண்ணின் விடுதலைக்காக அவர்கள் செய்யும் தியாகம்.

அது போலவே அகரத்திற்கு முதுகெலும்பாக இருப்பவர்களான... புலம் பெயர் வாழ்க்கையில் தங்களுக்கு இருக்கும் வேலைப் பளுக்களுக்கு மத்தியில், அகரத்தின் நிறைவுக்காக உழைக்கும் ஆக்கதாரர்களும் "அகரம் நூறு" என்ற இந்த வெற்றியைத் தாங்கிப் பிடிக்கும் தூண்களாகவே மதிக்கப்படுகின்றார்கள்.

இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இருப்பவர்கள் வாசகர்களாகிய நீங்கள்தான். பாராட்டுகளையும், விமர்சனங்களையும் உரிய நேரத்தில், உரிய முறையில் தந்து எங்களை நெறிப்படுத்திக் கொண்டிருக்கும் உங்களுக்கு எங்கள் இதயம் நிறைந்த நன்றிகள்.





பாகம் -7

# அதிக எண்ணிக்கையிலான வேறுபட்ட உத்திகளே வெற்றியைத் தரும்

## தமிழீழவிடுதலைப்போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

ஏன் 2009-இல் ஈழ விடுதலைப் போரில் பின்னடைவு ஏற்பட்டது என்பதற்குக் காரணமாக உள்நாட்டு சூழ்ச்சி, வெளி நாட்டு சதிகள், உலக நாடுகளின் புலிகள் மீதான தடை, உலக இராணுவங்களின் உதவி எனப் பல்வேறு கோணங்களில் ஏற்கனவே அலசப்பட்டிருக்கிறது. இவை என்ன நடந்தது என்று ஒரு கதையைக் கூறுகிறதே தவிர, அவற்றைப் பொதுவான அறிவியல் தத்துவங்கள் மூலம் விளக்குவதில்லை. அதனால் எங்கே நமது பிழை ஏற்பட்டது, இனி நாம் எது மாதிரியான உத்திகளைக் கையாளவேண்டும் என்ற விளக்கத்தை அளிப்பதில்லை.

ஆயுதப் போர்தான் 2009-இல் முடிவுக்கு வந்ததே ஒழிய, நமது ஈழ விடுதலை முன்னெடுப்பு நிற்கப்போவதில்லை. அதேபோல எதிரியின் இனவழிப்பு வேறு வகைகளில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த சூழலில் 2009-ஐ அறிவியல் பூர்வமாக அறிந்து, இன்றைய சூழலுக்கு ஏற்றுபடி உத்திகளை எவ்வாறு சீரமைப்பது என்பதை அறிவது அவசியம். அதுதான் இக்கட்டுரைப் பகுதியின் நோக்கம்.

முதலில் சிக்கலான அமைப்புகள் பற்றிய ஆராய்ச்சிகளிலிருந்து ஒரு முக்கியமான தத்துவத்தைப் பார்ப்போம், பின்பு இதனடிப்படையில் ஈழ விடுதலைப் போரையும், இன்று பயன்படுத்த வேண்டிய உத்திகளையும் ஆராய்வோம்.


**சிக்கல் வரைபடம் (Complexity Profile) :**

சிக்கலான அமைப்பு என்பது பல பாகங்களைக் கொண்டு, பாகங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து சிக்கலான முறையில் இயங்கும். உதாரணமாக உயிர்கள், சமூகங்கள், ஒரு நாட்டின் பொருளாதார, சுகாதார, கல்வி, இராணுவ அமைப்புகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றை எடுத்துக்கொள்ளலாம். ஒரு சிக்கலான அமைப்பு பல்வேறு சிக்கலான அமைப்புகளை உள்ளடக்கி இருக்கலாம். அனைத்து உயிர்களையம் உள்ளடக்கிய பூமிமண்டலம் (Biosphere) மிகச்சிக்கலானாது.

ஒரு சிக்கலான அமைப்பை புரிந்துகொள்வது எளிதல்ல; நாம் ஒன்று செய்தால் அதனால் விளையும் பக்க விளைவுகளை முன்கூட்டியே அறிய

முடியாது. உதாரணமாக உலகம் இயந்திர மயமாக்கல் மூலம் முன்னேற ஆரம்பித்தபின், அதன் விளைவாக பூமியும் சூடேற ஆரம்பித்தது. அதை முன்கூட்டியே நம்மால் அறிய முடியவில்லை. மேலும் அதனால் ஏற்படும் மாற்றங்களால் பல்வேறு உயிர்கள் உலகில் அழிந்து வருகின்றன. அதை எப்படிக் காப்பது என்பது இன்னும் புலப்படாத ஒன்று.

**படம் -1 மனிதனின் சிக்கல் வரைபடம்**




ஓர் அமைப்பு எதிர்நோக்கும் மொத்த சிக்கல்களை விளக்குவது சிக்கல் வரைபடம் ***(Complexity Profile)***. உதாரணமாக மனிதனை எடுத்துக் கொள்வோம் (படம்-1). *X*-அச்சு சிக்கலின் அளவைக் குறிக்கும். சிக்கலின் அளவு ஒரு “செல்” ***(cell)*** அளவிலிருந்து “அண்டம்” ***(Universe)*** வரை இருக்கலாம். *Y*-அச்சு எத்தனை வேறுபட்ட சிக்கல்களை நாம் எதிர்நோக்குகிறோம் என்பதைக் குறிக்கிறது.

ஒரு செல் அளவில் நமது உடலை பல்வேறு கிருமிகள் தாக்குகின்றன. புதிது புதிதாக கிருமிகள் உருவாகி புதிய நோய்களும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. நமது நோய் எதிர்ப்பு மண்டலம் இக்கிருமிகளுடன் தினந்தோறும் போரிட்டுக் கொண்டே இருக்கிறது. என்று போர் உக்கிரமாகி நோய் எதிர்ப்பு மண்டலாத்தால் முடியவில்லையோ, அப்பொழுதுதான் நாம் இந்தப் போரையே உணர்கிறோம், மருத்துவரை நாடுகிறோம்.

இவ்வுலகில் மக்களைக் கொல்வதில் முன்னிலையில் இருப்பது

NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE

நீங்கள் ஒரு முக்கிய நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடப் போகின்றீர்களா? பிறந்தநாள் விழா, திருமண விழா போன்றவைகளா? நாங்கள் உங்கள் விருப்பங்கள் மற்றும் எண்ணங்களுக்கு அமைவாக இலங்கை மற்றும் இந்திய உணவு வகைகளை அந்த நாட்டு முறைப்படி தயாரித்து வழங்குகிறோம்!

உங்களுக்கு உதவி தேவைப்படுகின்றதா? எவ்வித சிரமமும் இன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்!




திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள்!

நிழல்படம் மற்றும் விடியோ!

விநியோகம் மற்றும் பரிமாற்றம்!

Kontakt: Siemensstr. 25, 40721 Hilden





Rufen Sie uns an:
Tel.: 0211/7691974 | Mobile: 0173/7424955

இந்தக் கிருமிகளே. அதுபோக செல் அளவில் புற்று நோய் போன்று செல்மாறுதல் ***(Mutation)*** நிகழ்வுகளாலும் பாதிப்புகள் உண்டாகின்றன. மனிதன் எதிர்நோக்கும் சிக்கல்கள் என்பது சிறிய அளவில் மிக அதிகமாகவும், அளவு கூடக்கூட குறைவாகவும் இருக்கின்றன. இதைத்தான் படம் விளக்குகிறது. நாம் அன்றாடம் உணரும் சிக்கல்கள் என்பது இதில் ஒரு பகுதியே. பெரும்பாலான சிக்கல்கள் நமக்கு புலப்படுவதில்லை.

நாம் இவ்வுலகில் வெற்றிகரமாக வாழ்வதற்கு சிறிய அளவிலிருந்து பெரிய அளவு வரை அனைத்து சிக்கல்களையும் எதிர்கொள்ளும் வல்லமை வேண்டும். சுருக்கமாகக் கூறினால் நாம் சிக்கலை அதன் அளவிலும் எண்ணிக்கையிலும் ஈடுகட்ட வேண்டும். நமது செயல்பாடு சிக்கல் வரைபடத்திற்கு இணையாக இருக்கவேண்டும்.

நமது உடலை வெவ்வேறு கிருமிகள் தாக்குகின்றன. அதற்கு ஈடாக நமது நோய் எதிர்ப்பு மண்டலமும் கிட்டத்தட்ட அதே எண்ணிக்கை வேறுபாடான எதிர்-உயிர்களை ***(anti-bodies)*** உருவாக்கும் வல்லமை கொண்டது. நமது நோய் எதிர்ப்பு மண்டலம் எதிர்க்க முடியாத அளவிற்கு கிருமிகள் தோன்றும்பொழுது, நாம் நவீன மருத்துவ அமைப்புகளை உருவாக்கி நமது சிக்கலை எதிர்கொள்ளும் தன்மையைக் கூட்டுகிறோம்.

மனிதகுலம் சிறு அளவிலிருந்து பெரிய அளவு வரை சிக்கல்களை சம அளவில் எதிர்நோக்கும் தன்மையுடன் உள்ளது. அதனால் தான் மனிதன் இன்னும் அழியாமல் இருக்கிறான். மனிதகுலத்திற்கு சவால்களை எதிர்நோக்கும் அளவு சிக்கலான அமைப்புகளை உருவாக்க முடிவதால் சிறு கிருமிகள் முதல் சுனாமி வரை நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடிகிறது. இனி விண்ணில் இருந்து வரும் பெருங்கற்களையும் திசை திருப்ப முடியும்.

சமூகம் என்பது சிக்கலானது, எதிர்கொள்ளும் சிக்கல்கள் எண்ணிக்கையிலும் அளவிலும் பெரிது. சமூக சிக்கல்களையும் சிக்கல் வரைபடத்தைக் கொண்டு ஆராய்ந்து, அதற்கான தீர்வுகளைப் பற்றியும் சிந்திக்கலாம். முதலில் ஈழப்போரை ஆராய்வோம், பின்பு இன்று எதிர்நோக்கும் சிக்கல்களுக்கான தீர்வைப் பற்றி பார்ப்போம்.

**தொடரும் ...**



# STAR IMPEX
## Lebensmittel Grosshandel e.K.

Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de

# என்ன கொடுமை சரவணா!...

கல்லெலி வேலுப்பிள்ளை



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்?

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. ஊருக்குப் போய் உப்ப தான் வந்து சேர்ந்தனான் பாருங்கோ. அதால கொஞ்சம் அலுப்பாய் இருக்குது. மற்றும்படி ஒன்றுமில்லை. ஊரில மழை இல்லை, அங்கங்க நாளந்தத் தேவைக்கான தண்ணீரும் இல்லை பாருங்கோ. அங்க சனம் படுற பாடு சொல்லி மாளாது. வெளிநாட்டுக் காசு இருந்தாலும், குளிக்கத் தண்ணியில்லாட்டால் என்ன பிரயோசனம் சொல்லுங்கோ பாப்பம்.**

சரி, அதை விடுங்கோ, இஞ்ச வந்த உடன எல்லா இடமும் ஒரே கோயில் திருவிழாக்கள் களை கட்டி நடக்கிறதால சும்மா அப்பிடியே கோயிலுகளுக்கு போய் வருவம் எண்டு திரிஞ்சன். கோயிலுகள் வழமை மாதிரியே நல்ல சனத்தோட பொங்கி வழியுது பாருங்கோ. கோயில் கோயில் எண்டு ஓடுறம் சரி, ஆனால் ஏன் போறம் எண்டு கேட்டால், எல்லாச் சாமானும் மலிவாக வாங்கிறதுக்கு இப்ப திருவிழாவை விட்டால் ஏதும் கிடைக்குமோ சொல்லுங்கோ பாப்பம் எண்டு கேக்குதுகள். அதுவும் உண்மை தான் பாருங்கோ. ஒரே இடத்தில எல்லா அலுவலும் பார்க்கக்கூடிய ஒரே இடம் கோயில் மட்டும்தான் பாருங்கோ.

இப்ப கோயில்களில் அன்பும் அறமும் தவிர எல்லாம் கிடைக்கும் கண்டியளோ. ஏன் உப்பிடிச் சொல்லுறன் எண்டு சண்டைக்கு வந்திடாதேங்கோ. முக்கியமான இரண்டும் இல்லாத கோயில்களும் திருவிழாக்களும் தான்

இப்ப உங்கின காணக்கிடைக்குது பாருங்கோ. அதுக்குள்ளையும் ஆளுக்கொரு ஒலிவாங்கியும், ஒலிபெருக்கியும் கையுமா திரியுற எங்கட ஆக்கள் பண்ணுற ஆலாபனையளும் கொஞ்ச நஞ்சமில்லை.

விசயம் என்னெண்டா பாருங்கோ, உந்த கோயில்வெளிய திருவிழாக்கள் நடக்கேக்க, கோயிலுக்குள்ள வந்து கும்புடுற ஆட்களை விட, கோயிலைச் சுத்தி சுத்தி படம் எடுக்கிற ஆக்கள் அதிகமாக் கிடக்குது. அப்பிடி என்னத்தைத்தான் படம் எடுக்கிறாங்களோ தெரியேல்லை. ஐயர், குருக்கள், சிலைகள், கடைகள் எண்டு அதுகளையும் எடுக்கிறேல்லை. சரி, எடுக்கிற ஆக்கள் எல்லாம் ஏதோ ஊடகங்களுக்காக எடுக்கினமோ எண்டால் அப்பிடியும்

இல்லை. அப்பிடி விழுந்து விழுந்து கைத்தொலைபேசிகளாலயும், புகைப்படக் கருவிகளாலயும் படம் எடுத்து என்ன தான் செய்யுறாங்களோ எண்டு மண்டையைக் கசக்கிப் போட்டு வந்திட்டேன் பாருங்கோ.

வீட்டவந்து இரண்டு நாளைக்குப் பிறகு, சும்மா இணையத்தளங்களில செய்திகளை வாசிச்சுக்கொண்டு போனன் பாருங்கோ. திடீரெண்டு ஒரு கோயில் திருவிழா புகைப்படங்கள் எண்டு போட்டுக் கிடந்தது. சரி, எங்கயாவது என்னுடைய படமும் இருக்கும் தானே பாப்பம் எண்டு உள்ளுக்க போனால், ஒரு தொகைப் படங்கள் கிடந்தது கண்டியளோ. ஒவ்வொன்றாக வேகமாகத் தட்டிக்கொண்டு போகப் போக, தீச்சட்டி எடுக்கிறவையும், தேர் இழுக்கிறவையும் அரோகரா எண்டு கையை உயர்த்துறவையுமா படங்கள் நீளுது பாருங்கோ.

இதென்னடா இது, ஒரு ஆம்பிளை கூடக் கோயிலுக்கு வரேல்லையோ எண்டுற அளவுக்கு எல்லாமே பெண்களின்ர படங்கள் தான் பாருங்கோ. நானும் கிட்டத்த முந்நூறு படங்கள் பார்த்திருப்பன். ஒரு படத்தில கூட நான் இல்லை பாருங்கோ. ஏன் கனக்க் ஆம்பிளையளே இல்லை எண்டா பாருங்கோவன். முழுக்க முழுக்க வித விதமான கோணங்களில எடுக்கப்பட்ட பெண்களின்ர படங்கள்தான் பாருங்கோ.

எட கோதாரி விழுவானுகளே, கலாசாரமும் ஒற்றுமையும் பேணுற இடமாகக் கோயில் இருக்கும் எண்டு சனம் நினைச்சு பிள்ளைகளோட கோயிலுக்கு வந்தால், கண்டதை எல்லாம் படம் எடுத்து பொதுவெளியில போடுறதேடா உங்கட வேலை..? அதுவும் பாருங்கோ, கையைத் தலைக்கு மேல உயர்த்திக் கும்புடுற பிள்ளையைப் பக்கவாட்டால படம் எடுத்துத் தன்னுடைய இரசனையை வெளிப்படுத்தியது மட்டுமில்லாமல், அதை இணையத்தில போட்டும் வைச்சிருக்கிறாங்கள் எண்டா பாருங்கோவன்.

சரி, செய்தி இணையங்களைத்தான் ஆக்கள் பெரிசாப் பாக்குறேல்லை எண்டாலும், சமூக வலைத்தளங்களில போடுற படங்களிலையாவது கொஞ்சம் பொறுப்புணர்ச்சி வேண்டாமே..? உங்கட கொக்கா தங்கச்சி எண்டால் உப்பிடி விதம் விதமாப் படம் எடுத்துப் போடுவியளே? அதிலயும் செய்த காரியம் ஏதோ சாதனைக்குரிய காரியம் மாதிரி, படங்களின்ர மூலையில அவையின்ர பெயருகளையும் போட்டிருவினம் கண்டியளோ . வயசு போன ஆக்கள் அல்லது குடும்பப் பெண்கள் எண்டாலும் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளலாம். எட குறுக்கால போவாரே, இளம்பிள்ளையளைப் படம் எடுத்துப் போட்டால் அதுகள் நாளைக்கு நிம்மதியா வாழுறேல்லையே தெரியாமத்தான் கேக்குறன்.

தேர் இழுக்கிற பெண்களை நேரில நிண்டு படம் எடுக்கலாம், அதென்ன மேல நிண்டு படம் எடுக்கிறது...? அங்கப் பிரதட்டை செய்யுற பெண்களை, ஒவ்வொரு முறை உருளேக்கையும் படம் எடுத்துப் போட்டிருக்கினம். ஏன் அங்கப் பிரதட்டையில அப்படி என்ன பார்க்கக்கிடக்குது எண்டு எனக்கு விளங்கேல்லைப் பாருங்கோ. அதுகள் தங்கட நம்பிக்கையின் அடிப்படையில ஏதோ செய்யுதுகள் எண்டால், அதைப் படம் எடுத்து உந்தப் படப்பிடிப்பாளர்கள் என்ன செய்யப்போகினம் எண்டு எனக்குப்


Nimal HD
மங்கல நிகழ்வுகள் அனைத்துக்குமான சகல ஒழுங்கமைப்புகளும்
மிகச் சிறந்த முறையில் செய்து தரப்படும்
மேடை நிகழ்வுகள் மறுநாள் பெற்றுக் கொள்ள முடியும்
Photo
Video
Sound. DJ
Led Lighting
Led Displayed
Decoration
Food Servers
Makeup
Stage Programs
2019இல் இருந்து புத்தம் புதுப் பொலிவுடன் அதிதுரித சேவை
Contact 015233832955
email : nimalvideo@gmail.com
We can also get the service of the Event

புரியேல்லை பாருங்கோ..? உங்களுக்கு ஏதும் புரியுதே..? சிலநேரம் படம் எடுக்கிறதை நேர்த்திகடனாகச் செய்யினமோ தெரியேல்லை. ஏன் எண்டால் காலையில இருந்து பின்னேரம் வரைக்கும் சுழட்டிச் சுழட்டி எடுக்கினமே தவிர, அவை வேற எதுவும் செய்யுறதாக் காணேல்லைப் பாருங்கோ.

அதுக்குள்ளே பாருங்கோ கோயில் நிர்வாகசபையில அங்கம் வகிக்குற ஆட்களுக்கும் உதுகளை கவனிக்க எங்க நேரம் பாருங்கோ. அவை அஞ்சு யூரோ பெறுமதி உள்ள அரிச்சனைத் தட்டை ஐம்பது யூரோவுக்கு விக்குறதில குறியா இருப்பினமோ, அல்லது ஆர் ஆரைப் படம் எடுக்கினம் எண்டு பாப்பினமோ..? உண்மையில எப்ப நிர்வாக சபையிலே உள்ள ஆக்களின்ர பிள்ளைகளின் படங்கள் வருகுதோ அண்டைக்குத்தான் உவை கொதிச்செழும்புவினம் எண்டு நினைக்கிறன். தீச்சட்டியைத் தலையில வைச்சுக்கொண்டு போற பிள்ளையை ஏன் வித விதமாகப் படம் எடுக்கினம் எண்டு எனக்கு விளங்கேல்லை பாருங்கோ.

ஒண்டில் அந்தப் பிள்ளையின்ர குடும்பத்தார் எடுக்கலாம், அல்லது புருசன் எடுக்கலாம். எதுக்கு ஊடகம் நடத்துறவையும், தொல்லைக் காட்சி விடுறவையும் எடுக்கினம் எண்டு விளங்கேல்லை பாருங்கோ. என்ர கூட்டாளி ஒருத்தரிட்ட உதைப்பற்றிக் கேட்டன். சில நேரம் தங்கட ஊடகத்தின்ர விளம்பரத்துக்காகவும் உப்பிடிப் படங்கள் எடுத்துப் போடுவினம் எண்டு ஆள் சொல்லிச்சுது. விளம்பரம் வேணும் எண்டால் சொந்தக் குடும்பத்தில இருந்து எடுத்துப் போடலாமே, எதுக்கு ஊர்ப்பிள்ளைகளை எடுக்கினம் எண்டு கேட்டால், கூட்டாளி கையை விரிச்சிட்டார் பாருங்கோ.

எனக்கெண்டாப் பாருங்கோ தலைச் சுத்து வந்திட்டுது. கோயில் எண்டு பலர் நடத்திறதே இஞ்ச உழைப்பை அடிப்படையா வைச்சுத்தான் பாருங்கோ. எப்பிடியாவது எங்கட ஆக்கள் ஒன்றாக இணைஞ்சு ஏதோ ஒண்டைச் செய்யுதுகள், ஒருத்தரை ஒருத்தர் சந்திக்குதுகள் எண்டு நினைச்சால், அதில குளிர் காஞ்சு வியாபாரம் பாக்குறவனை என்ன செய்யலாம் சொல்லுங்கோ பாப்பம்..? நான் பெற்றோருக்கும், பெண்பிள்ளைகளுக்கும் சொல்லக்கூடியது ஒண்டு தான் பாருங்கோ. உங்கட வாழ்க்கையை நீங்கள் தீர்மானிக்கக் கூடிய தகுதியும், உங்கட பாதுகாப்பும் உங்கட கையில இருக்குது கண்டியளோ.

உங்கட புகைப்படங்களை எடுத்து, சமூக வலைத் தளங்களிலையும், இணையச் செய்திகளிலையும் போட்டு, அதை ஆராரோ கைமாறி எடுத்து, உங்களுக்கே சம்பந்தம் இல்லாத ஆக்களின்ர கைகளிலே போய்ச் சேருறது உங்கட தனித்தன்மையை மீறுற விசயம் கண்டியளோ.

திருவிழாக்களில உங்கட அனுமதி இல்லாமல் இனி யாராவது உங்களைப் படம் எடுத்தால், படம் எடுக்கிறவருக்குச் செவிடு பறக்கக் காதைப் பொத்தி ஒண்டு குடுத்துப் போட்டு, உடனடியா காவல்துறைக்கு அறிவியுங்கோ. உடனே காவல் துறை வந்து அவர் ஏன் படம் எடுத்தவர், எந்த ஊடகத்தில பணிபுரியுறார் எண்டு விசாரிச்சுத் தெரிஞ்சு கொள்ளட்டும்.

ஓரிரண்டு பேருக்கு உப்பிடிச் செய்தியளே எண்டால், இனி ஒருத்தரும் உங்களை நோக்கி கருவியளைத் தூக்க யோசிப்பினம். எங்க ஒரு பொம்பிளைப் பிள்ளை நிண்டாலும் உடன படம் எடுக்கிற ஆட்களுக்கு இனி ஒரு பாடம் கற்பிக்க வேணும் பாருங்கோ. ஒருவரின்ர அனுமதி இல்லாமல் படம் எடுத்து சமூக வலைத் தளங்களில வெளியிடுறது மாபெரும் குற்றம் பாருங்கோ. மக்கள் கூடும் இடங்களில வந்து, அனுமதி இல்லாமல் கண்டபடி நிழற்படம் எடுக்கிற ஆட்களுக்கு நல்ல ஒரு பாடம் கற்பிக்கவேணும் பாருங்கோ.

**உலகத்தில் திருடர்கள் சரிபாதி**
**ஊமைகள் குருடர்கள் அதில் பாதி**
**கலகத்தில் பிறப்பது தான் நீதி**
**கலங்காதே மனம் மயங்காதே...!**

**- அப்ப வரட்டே**

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles



தாலி மற்றும்
பொன்னுருக்குதல்,
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்

ஒவ்வொரு வருடமும் தைமாதம்
எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100 CHF என 12
மாதம் 1200 CHF இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்யலாம்.

Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com

nfo@nsjewellery.com Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52

GUARANTEE
BEST PRICE
GUARANTEE

உயர்தர
புடவைகள் மற்றும்
துணி வகைகள்
வாங்க
சிறந்த இடம்



Rani palace

044 440 60 52
ranipalace60@gmail.com

Tel : 044 440 60 52

Neugasse 60, 8005 Zurich - Switzerland

# PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

**www.pagevision.ch**

உங்கள் கணினிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



ATX Standard Tower, 2x USB Front Anschluss, in 5 Farbvariationen erhältlich
Intel Pentium G4400, 2x 3.30GHz, Dual Core, 3MB Cache
Intel H110 Chipsatz, Gigabyte GA-H110M-DS2 Mainboard
8GB DDR4 Ram, Markenprodukt, 2133MHz
120GB SSD Laufwerk, 550MB/s lesen - 350MB/s schreiben
22x DVD-Brenner +/-/RAM Dual Layer
Kartenleser für alle Formate
8-Kanal Sound für Surround Systeme
10/100/1000Mbit Netzwerkanschluss für Netzwerke und Breitband-Internet
Windows 10 installiert und konfiguriert, inkl. DVD und Lizenz
21.5" Breitbild-Flachbildschirm, 5ms, integrierte Lautsprecher
kabellose Maus (optisch) und Tastatur

## PC Systems

**CHF 695.- inkl. MwSt**



## Note Books

AMD E-450 Dual Core Prozessor, 2x 1.66GHz
4GB DDR-3 RAM, Markenprodukt
400GB Festplatte, 8MB Cache, 5400RpM
DVD-Brenner Laufwerk, ±R/±RW/Dual Layer
AMD® A50M FCH Chipsatz
15.6" HD LED Display, spiegelnd, Auflösung 1366 x 768
ATI Radeon HD6310 Grafik integriert, bis 1469MB dynamisch
10/100Mbit Netzwerkkarte
integriertes Mikrofon und Lautsprecher
Gewicht 2.3kg inkl. Akku
300Mbit WLAN, UMTS optional
Schweizer Tastatur inkl. 10er Zahlenblock
374 x 250 x 14.3-34.1mm
Netzteil, Akku (Laufzeit 3-4.5h)
Windows 7 Home Premium, installiert und Konfiguriert, inkl. DVD und Lizenz

**CHF 499.- inkl. MwSt.**

## Reparaturen Aller Marken

Sehr Schnelle Lieferung!
Hauslieferungen
Vor-Ort Installationen
Netzwerklösungen für Firmen
Reparaturen aller Marken!

## iPhone Reparaturen

www.iphonefan.ch

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken

**www.pckaufen.ch**

Tellstr.31, 8004 Zürich - Tel : 043 317 9101
Kirchgasse 33, 8302 Kloten - Tel : 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel : 052 203 15 50
Rosengartenstrasse 4-8037 Zürich - Tel : 044 271 00 07

## வண்ணை தெய்வம்

மிகச் சிறிய வண்ணப் படங்களான முத்திரைகள் பல வரலாற்றுத் தகவல்களை தம்முள் புதைத்து வைத்துள்ளன! தமிழின் தொல்சீரமைக்கும், அதன் வளர்ச்சிக்கும், சமயப் பணிகளுக்கும், மற்றும் பல்வேறு வகைகளில் தமிழுக்காக பெரும் பங்காற்றிய இலங்கை வாழ் தமிழ் பேசும் அறிஞர்களை, இலங்கை அரசாங்கம் அவ்வப்போது கௌரவம் செய்திருக்கின்றது! அதன் அடையாளமாக வெளியிடப்பட்டவைதான் இந்த கௌரவ முத்திரைகள்.

இங்கு நாம் தமிழ் அறிஞர்கள் என்னும் போது, தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட, தமிழ் பேசும் இஸ்லாமியர்களையும் இணைத்தே சொல்கின்றோம்.

முத்திரைகளில் முகம் பதித்த தமிழர்களில் ஆரம்ப காலத்தில் இலக்கியவாதிகளே அதிகமாக இடம்பிடித்திருக்கின்றார்கள். குறிப்பாக பதிப்புத் துறையில் முன்னோடியானவர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள். இவர் "நீதிநெறி விளக்கம்" என்னும் நூலினைப் பதிப்பித்து, தமிழ்ப் பதிப்புத்துறை முன்னோடி என்னும் பெருமை பெற்ற காரணத்தினாலேயே இவருக்கு அரசாங்கம், தபால் முத்திரையை வெளியிட்டது. இலங்கைப் பிரஜையாக இருந்தாலும், சென்னை அரசினர் மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராக கடமையாற்றியவர், அது மாத்திரமல்ல, தனது கடும் உழைப்பினால் தொல்காப்பியப் பொருளதிகாரம் உட்பட பத்து பண்டைக்கால இலக்கிய நூல்களைப் பதிப்பித்ததுடன், ஒன்பது நூல்களை இயற்றியுள்ளார். இத்தகைய சிறப்புகளுக்காகவே இவருக்கு தபால் தலை வெளியிட்டு அரசாங்கம் கௌரவித்திருந்தது.

இதேபோல இலக்கியத் துறையில் பெரும் பங்காற்றியதோடு, பதிப்புத்துறை மட்டுமல்லாது பல சைவப்பிரகாச வித்தியாலயக் கல்லூரிகளையும் ஸ்தாபித்து, தமிழ்ப்பணியும், சைவப்பணியும் ஆற்றியவர் திருமிகு. ஆறுமுக நாவலர் அவர்களுக்கும்.... இந்த வரிசையில் இலக்கியக் கலாநிதி "பண்டிதமணி" சி. கணபதிப் பிள்ளை, சுவாமி விபுலானந்தர், ஞானப்பிரகாச சுவாமிகள் போன்ற இலக்கிய மேதைகள் பலர் முத்திரையில் முகம் பதிக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டிருக்கின்றார்கள்.

குழந்தை இலக்கியத்திற்காக கௌரவிக்கப் பட்டவர் கலாயோகி ஆனந்த குமார சுவாமி அவர்கள். (குமாரசுவாமிப் புலவர்) "ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை, ஆனந்தம்! ஆனந்தம்! தோழர்களே!!" "கத்தரித் தோட்டத்து மத்தியிலே நின்று, காவல் புரிகின்ற சேவகா" போன்ற இவரது குழந்தைப் பாடல்கள் மிக நீண்ட காலமாக இலங்கைப் பாடப் புத்தகத்தில் இடம் பெற்றிருந்தமை வரலாற்றுப் பதிவாகும்.

கல்விமான்கள் வரிசையில் சேர்.பொன் அருணாசலம், சேர்.பொன்.ராமநாதன் போன்ற அறிஞர்களில் இருந்து, பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதி முத்துக்குமார சுவாமி, திரு.வைத்திலிங்கம் குமாரசுவாமி போன்ற அறிஞர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

# முத்திரையில் முகம் பதித்த தமிழ் அறிஞர்கள்

## மண்வாசனை






இதில் திரு முத்துக்குமாரசுவாமி அவர்கள், சைவ சித்தாந்தத்தை முதன் முதலில் ஆங்கிலேயருக்கு விளக்கியவராவார். இவரது ஆங்கில மொழிப் பேச்சுத் திறமைக்காக விக்டோரியா மகாராணியாரால் "சேர்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். ஆசியாவிலேயே முதன் முதல் "சேர்" பட்டம் பெற்றவர் என்னும் பெருமைக்குரியவரும் இவரே.

இவர் லண்டனில் உள்ள கலைக்கூடங்களில் தொடர்ச்சியாக "சைவ சித்தாந்தம்" பற்றியும், இந்தியத் தத்துவம் பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்றியவர்! இந்த மாமேதை 1879ம் ஆண்டு மே மாதம் நான்காம் திகதி மரணமான பின்பு, இவரைக் கோரவிக்கும் முகமாக இலங்கை அரசாங்கம் இவர் உருவப்படம் பொறித்த ஒரு ரூபா பெறுமதியான தபால் தலையை வெளியிட்டுக் கௌரவித்தது.

இந்த அறிஞர்கள் வரிசையிலே இஸ்லாமிய சகோதரர்களான ஏ.எம்.ஏ. அசீஸ், கலாநிதி அல்காஜ் பதியூதீன், திருவாளர் சித்தி லெப்பை, ஏ.எம். ஆசிப், ஏ.எஸ்.ஏ. கலீல், போன்ற பல அறிஞர்களுக்கும் இலங்கை அரசாங்கம் தபால் தலை வெளியிட்டுக் கௌரவித்திருக்கின்றது.

திரு.அசீஸ் அவர்கள் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்தவர். இலங்கையின் முதல் முஸ்லீம் சிவில் சேவையாளரான இவர், பின்னர் ஸாகிரா கல்லூரியின் அதிபரானார். "அரபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ்" என்னும் மொழிக் கோட்பாட்டின் ஊடாக, முஸ்லீம் சமுதாயத்தின் மொழிக் கோட்பாட்டை நிறுவ வேண்டுமென வலியுறுத்தி வந்தவர். இந்தக் கருத்தை 1970ல் சென்னையில் நடந்த "சர்வதேச இஸ்லாமிய தமிழாராட்சி மாநாட்டிலும் முன்வைத்தார். இதுவே இவரின் புகழை சர்வதேச அளவில் உயர்த்தியது.

தமிழர்கள் மத்தியில் புகழடைந்த தமிழ்த் தலைவர்களில் திருவாளர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களுக்கு தபால் தலை வெளியிடப்பட்டதும் குறிப்பிடத் தக்கதாகும். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இருந்து, அமரத்துவமடைந்த திருவாளர் எஸ்.யே.வி.செல்வநாயகம் அவர்களுக்கும் கௌரவ நினைவு முத்திரை வெளியிடப்பட்டதாக இலங்கையின் வரலாற்றைத் தெரிந்த அறிஞர் ஒருவர் எனக்குத் தகவல் தந்தாலும், கூகிள் வரை நான் தேடியதில், இவர் பற்றிய எந்தத் தகவலும் முத்திரை பதித்தவர்கள் வரிசையில் காணமுடியவில்லை.

முத்திரை பதித்த தமிழ் அறிஞர்கள் வரிசையில் எமது கட்டுரைக்குள் பெயரில் அடங்காத பலர் படங்களுள் இடம் பெற்றிருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

AKM

Alpenstr.1, 3072 Ostermundigen
Tel. 031 9312525 (Bern Nilavani)
Basel Str. 80, 6003 Luzern
Tel. 041 2405400

மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்..!

தமிழனின் வரலாற்றில்
மாபெரும் புரட்சி

இதய பூமியாம்
கிளிநொச்சியை மையமாகக் கொண்டு
தமிழரின் உழைப்பில் உற்பத்தியானது






உங்கள்
இனத்துக்கு உதவிய
திருப்தியுடன்
வாங்கிச்
செல்லுங்கள்!



AKM

முத்திரை பதித்த
அனைத்துப் பொருட்களையும்
ஒருமுறைச் சுவைத்தால்
ஈழத்துச் சுவை உங்கள் நாவில்
ஆழமான தனிச்
சுவை தரும்..!

கிளிநொச்சி / முல்லைத் தீவு / யாழ்
மன்னார் மாவட்டங்களில் இருந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும்
ஒரு தமிழனின் துயர் துடைக்கும்

“விலை அல்ல எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது
தரம் மட்டுமே! நல் வாழ்வைத் தரும்

AKM Mani Face book page : AKM

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்

“உளம் திறக்கும் உண்மைகள்…” என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### இயற்கை

கண்களால் காணும்
இயற்கையை விடவும்
இன்னொரு இறைவன்
எங்கே இருக்கிறான் ?

### சொந்தம்

முதுமைக்குத் தேவையானது
சொத்து அல்ல,
சொந்தம்..

### கண்ணீர்

கண்ணீரால் பாவங்களைக்
கழுவிட முடியாது.
கண்ணீரே பாவத்தின்
விளைவுதான்.

### சிறை

சிறை என்பதெல்லாம்
வெறும் காட்சிக்கு,
மனித மனங்களை
அடைக்க முடியாதவரை .

### காலம்

முழுதும் துறந்தவனே
முன்பெல்லாம் துறவி
முழுதும் கொண்டவனே
இப்போது துறவி

சத்தமில்லாமல்
மெல்ல வந்து
எழுப்பி விட்டுப் போகிறது
இந்த மழை இரவு
உன் நினைவுகளை

மெய்சிலிர்க்கும்
காற்றினூடாக
சுமந்து வருகிறது
இந்த மழை
உன்னைப் பற்றிய
கவிதைகளையும்

சொல்வதற்கு
ஒன்றுமில்லை
என்றான போதும்
ஏதாவது சொல்வாய்யென
பரிதவிக்கிறேன்
தாய் பறவையின்
அலகினூடாக
பசியாறத் துடிக்கும்
குஞ்சுகளாய்

மழை
வரும் போதெல்லம்
மனமும்
குளிர்ந்து விடுகிறது
உன்னைப் பற்றிய
கவிதை வரிகளில்

நீரின்றி மட்டுமல்ல
நீ யின்றியும்
அமைவதில்லை
இந்த உலகு

இப்போது
இங்கே மழை
நனைந்து விடாமல்
பாதுகாக்கிறேன்
உன்னை

**நந்தவனம் சந்திரசேகரன்**

## மாந்தர்

நஞ்சிதயம் கொண்டோரின்
நயவஞ்சகச் செயலாலும்
நண்பர்போல் நடித்திட்ட - குள்ள
நரிக் கூட்டத்தாலும்
நல்லோரின் நல்வாழ்வும்
நடுத்தெருவில் நிற்கிறதே!

## சீற்றம்

சீறும் நாகத்திலும்
தீயது கடுஞ்சீற்றமே - அச்
சீற்றத்தால் வரும் சொற்களே - வெந்
தீயினால் வரும் வலியிலும் கொடியது!

## சாதனை

நூதனமான நூற்பயன்கொண்ட,
நூனயம் பொருந்திய இதழ்!
நூலோர் நுகர்ந்திட
நூறாயிரம் தடைகளைத் தாண்டியுள்ளது
நூன்மடந்தை அருள்பெற்ற
நூறாவது அகரம் இதழ்!!!

தேசா

# அகர கவிக்களம்....





## நன்மை பயக்குமா

போகும் இடமெல்லாம்
புறக்கணிப்பு செய்தால்
போவது தான் எங்கே !
புத்தி ஜீவிகள் ஊடுருவல்
உலகிற்கு நன்மை
பயக்குமா
இல்லை அழிந்துவிடுமா.

கண்டனங்கள் சொல்லியே
காலம் கடந்துவிட்டது
தண்டனைகள் ஏதுவும்
சரிவர நடக்கவில்லை.

## பகுத்தறிவு

பங்கம் விளைவிக்க
பகுத்தறிவு
அங்கம் போனாலும்
அசையாது நிலைத்து
நிற்கும்.

## நினைப்பு

கடவுளும் சில சமயம்
கள்வருடன் சேர்ந்து
கபடி விளையாடுவார்
போல என்று
மனிதன் நினைக்கலாம்.

கெங்கா ஸ்டான்லி

**தேவன்**

குடிநீர், குளிக்கும் நீர் பற்றி நமக்குத் தெரியும். ஆனால், எத்தனை பேருக்கு மறைநீர் விலை தெரியும்? மறை நீர் என்பது ஒருவகை பொருளாதாரம். மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு நாட்டின் பணத்தைக் கொண்டு மதிப்பிடுவது போல, ஒரு நாட்டின் நீர் வளத்தை கொண்டு மதிப்பிடும் தண்ணீர் பொருளாதாரம் இது. இதை கண்டுபிடித்தவர் இங்கிலாந்தை சேர்ந்த பொருளாதார வல்லுநர் யோன் அன்ரனி ஆலன். இந்த கண்டுபிடிப்புக்காக **'Stockhome water -2008'** விருது பெற்றவர்.

ஒரு பொருளுக்குள் மறைந்திருக்கும் கண்ணுக்கு தெரியாத நீர் - இதுவே மறை நீர். இது ஒரு தத்துவம், பொருளாதாரம். ஒரு தொன் கோதுமை 1,600 கியூபிக்மீற்றர் தண்ணீருக்கு சமம் என்கிறது மறைநீர் தத்துவம். மறை நீர் என்பதற்கு ஆலன் தரும் விளக்கம், "கோதுமை தானியத்தை விளைவிக்க நீர் தேவை. ஆனால், அது விளைந்தவுடன் அதை உருவாக்கப் பயன்பட்ட நீர் அதில் இல்லை. ஆனால், அந்த நீர், கோதுமை தானியங்களுக்காகத்தானே செலவிடப் பட்டிருக்கிறது அல்லது மறைந்திருக்கிறது. இதுவே மறை நீர். "கோதுமை தேவை அதிகம் இருக்கும் ஒரு நாடு, ஒரு மெட்ரிக் டன் கோதுமையை இறக்குமதி செய்யும்போது, அந்த நாடு 1,600 கியூபிக் மீற்றர் அளவுக்குத் தனது நாட்டின் நீரைச் சேமித்துக்கொள்கிறது" என்கிறார் ஆலன்.

ஒரு A4 அளவு வெள்ளைத்தாள் - 11 லீற்றர் நீர்

ஒரு லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட பாட்டில் தண்ணீர் - 5 லீற்றர்நீர்

ஒரு குவளை மது - 74 லீற்றர்நீர்

ஒரு குவளை பால் - 208 லீற்றர்நீர்

ஒரு குவளை ஒயின் - 118 லீற்றர்நீர்

ஒரு சோடி காலணி - 7,770 லீற்றர்நீர்

ஒரு ஆண்களுக்கான தளர்சட்டை - 1960 லீற்றர்நீர்

ஒரு காற்சட்டை - 6660 லீற்றர்நீர்

300 கிராம் இனிப்பு - 2500 லீற்றர்நீர்

1.1 டன் எடையுள்ள மகிழுந்து - 4 லட்சம் லீற்றர்நீர்

நீரின் தேவையையும், பொருளின் தேவையையும் துல்லியமாக ஆய்வுசெய்து அதற்கு ஏற்ப உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை வகுக்க வேண்டும். சீனா, இசுரேல் மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் அப்படித்தான் செய்கின்றன. சீனாவின் பிரதான

## மறை நீர் - மறைந்திருக்கும் நீர்

# அறிவியல்



## நான் தெள்ளியவோர் முடிச்சவிக்கி

உணவு பன்றி இறைச்சி. ஒரு கிலோ பன்றி இறைச்சி உற்பத்திக்கான மறை நீர் தேவை 5,988 லீற்றர்நீர். அதனால், சீனாவில் பன்றி உற்பத்திக்கு தேவை அதிகம். ஆனால், தாராளமாக இறக்குமதி செய்துகொள்ளலாம். ஒரு கிலோ தோடம்பழத்திற்கான மறை நீர் தேவை 560 லீற்றர். சொட்டு நீர் பாசனத்தில் கோலோச்சும் இசுரேல் தோடம்பழ உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு கெடுபிடிகள் அதிகம். இவ்விரு நாடுகளும் ஒவ்வொரு பொருளுக்குமான மறை நீர் தேவையைத் துல்லியமாகக் கணக்கிட்டு அதன்படி ஏற்றுமதி, இறக்குமதி கொள்கைகளை வகுத்துள்ளன.

முட்டை உற்பத்தியில் இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது மகாராட்டிரம். நாமக்கல்லுக்கு இரண்டாவது இடம். நாமக்கல்லில் ஒரு நாளைக்கு மூன்று கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதில் 70 லட்சம் முட்டைகள் தினசரி வளைகுடா நாடுகள், ஆபிரிக்க மற்றும் ஐரோப்பா நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இதன் மூலம் ஆண்டுக்கு 4.80 கோடி டொலர்கள் அந்நியச்செலவாணி கிடைக்கிறது.

வளைகுடா மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் தண்ணீர் பற்றாக்குறை கொண்டவை. ஐரோப்பிய நாடுகள் மறைநீர் தத்துவத்தைப் பின்பற்றுபவை என்பதை இங்கு கவனிக்க வேண்டும். சரி, சராசரியாக 60 கிராம் கொண்ட ஒரு முட்டையை உற்பத்தி செய்ய 196 லீற்றர் மறைநீர் தேவை. மூன்று ரூபாய் முட்டை 196 லீற்றர் தண்ணீரின் குறைந்தபட்ச விலைக்குச் சமம் என்பது எந்த ஊர் நியாயம்? முட்டையினுள் இருக்கும் ஒரு கிராம் புரதத்துக்கு 29 லீற்றர் மறை நீர் தேவை. ஒரு கிலோ கோழி இறைச்சி உற்பத்திக்கான மறை நீர் தேவை 4,325 லீற்றர்.

பன்னாட்டு நிறுவனங்கள் ஆசிய நாடுகளில் ஆண்டுக்கு இலட்சக்கணக்கான மகிழுந்துகளைத் தயாரித்து, அவர்கள் நாடு உட்பட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன ஏன்? அவர்களின் நாடுகளில் அவற்றை உற்பத்தி செய்ய முடியாதா? உண்டு. இங்கு மனித சக்திக்கு குறைந்த செலவு என்றால், நீர்வளத்துக்கு செலவே இல்லை. 1.1 தொன் எடை கொண்ட ஒரு மகிழுந்து உற்பத்திக்கான மறை நீர் தேவை நான்கு இலட்சம் லீற்றர். ஒரு எருமை அல்லது




மாட்டின் ஆயுள்கால மறை நீர் தேவை 18,90,000 லீற்றர். 250 கிலோ கொண்ட அக்கால்நடையில் இருந்து ஆறு கிலோ தோல் கிடைக்கும். ஒரு கிலோ தோலை பதனிட்டு அதனை செருப்பாகவோ கைப்பையாகவோ தயாரிக்க 17,000 லீற்றர் மறை நீர் தேவை. 250 கிராம் பருத்தி உற்பத்திக்கான மறை நீர் தேவை 2495 லீற்றர்.

ஏன் அபிவிருத்தியடைந்த உலக நாடுகள் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டும்? அங்கு இல்லாத தொழில் நுட்பமா? அங்கு இல்லாத வளங்களா? அங்கு இல்லாத எந்திரங்களா? பிறகு ஏன் உலக நாடுகள் அபிவிருத்தியடையாத நாடுகளில் கடை போடுகின்றன. காரணம் தங்கள் வளங்களின் மீது அவர்களுக்குள்ள அக்கறை. அவற்றை பாதுகாக்க ஆரம்பித்து விட்டார்கள். மனித வளச் சுரண்டலையும், இயற்கை வளச் சுரண்டலையும் செய்ய அவர்கள் அபிவிருத்தியடையாத நாடுகளைத் தேர்ந்தெடுத்து விட்டனர்.

நாம்தான் வளங்களை வாரிக் கொடுப்பதில் வள்ளல்கள் ஆயிற்றே!. நாம் ஏற்றுமதி செய்யும் பொருட்களால் கணிசமான பொருளாதார வளர்ச்சி இருந்தாலும் கூட, நாம் பொருட்களை ஏற்றுமதி செய்யவில்லை. மாறாக பொருட்களின் வழியே பல கோடி லீற்றர் தண்ணீரையே ஏற்றுமதி செய்கிறோம்.

நம் கண்ணுக்குத் தெரியாமலேயே நாமே நம் நீர் ஆதாரங்களைத் தொலைத்துக் கொண்டிருக்கிறோம். தண்ணீர் அதிகம் தேவைப்படும் பெரும்பாலான பொருட்களை உலக நாடுகள் நம் நாட்டிலிருந்துதான் உற்பத்தி செய்து இறக்குமதி செய்து கொள்கின்றன. மேலும் அந்தப் பொருட்கள் இங்குள்ள எல்லோருக்குமானவையாகவும் இல்லை என்பது மற்றொரு சோகம். பணம் படைத்தவர்கள்தான் ஆடம்பரப் பொருட்களைப் பயன்படுத்துகிறோம். தண்ணீர் களவுபோவதோ, தண்ணீரை காசு கொடுத்து வாங்குவதோ பெரும்பாலானோருக்கு ஒரு விடயமாகவே தெரியவில்லை. அந்த வகையில் எளிய மக்கள் முட்டாளாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர் என்பது சோகம்.

மூலம் : ***World Water Crise,***




# IMPORTAS

Cash & Carry

தாயக உணவு வகைகள் உட்பட அனைத்து உணவு
வகைகளையும் உயர் தரத்தில் மிக மலிவாகவும்
நீங்கள் நம்பிக்கையோடு நாட வேண்டிய ஒரே இடம்...



## பேர்ண் நகரில்

# புதிய உதயம்

வாடிக்கையாளர்களின் ஏகோபித்த
வேண்டுகோளுக்கிணங்க 30 வருடங்களாக
தமிழர்களின் அபிமானம் வென்ற
"இம்போட்தாஸ்" நிறுவனம் பேர்ண் மாநகரில்
தனது கிளையை திறந்து வைக்கின்றது

**Kranichweg 8, 3074**
**Muri Bei Bern**
**☎ 031 951 24 44**

Subash | Rubicon | RENUTÉ | PG tips | PATAK'S | Niru | Nestlé
Maggi | Kings | Gits | ELAKKIA | TRS | Thai Pride | SURYAA

Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56
email : info@importas.ch Web : www.importas.ch

நேர்காணல் : இரவி

# அன்று தேசியத்தலைவர் உருவாக்கிய கூட்டமைப்பு அல்ல இது

திரு.கஜேந்திரகுமார்

**தமிழ்த்தேசிய மக்கள் முன்னணித் தலைவர் திரு. கஜேந்திரகுமார் அவர்களிடம் அகரம் இதழின் ஊடகவியலாளர் நடாத்திய நேர்காணல்.**

***வணக்கம் கஜேந்திரகுமார் அவர்களே! சமகால அரசியல் நிலைமைகளை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?***

இலங்கைத் தீவை மையப்படுத்திய அரசியல் என்பது சர்வதேச கண்காணிப்பிற்கு மிகத் தீவிரமாக உள்ளாக்கப்பட்டிருக்கின்ற நிலைமையைக் காண்கிறோம். பூகோள, சர்வதேச அரசியலின் பிரகாரம் இந்த நாட்டுக்குள் பல வல்லரசுகள் தங்கள் நலன்களைப் பேணுவதற்கு விரும்புகின்றன என்று நாங்கள் கடந்த பத்து வருடத்திற்கு மேலாக சொல்லிக்கொண்டு வருகின்றோம். அது இன்றைக்கு வெளிப்படையாகத் தெரிகிறது.

இன்றைக்கு 'சோபா' என்ற இராணுவ ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்கா, இலங்கையுடன் கைச்சாத்திட்டு திருகோணமலை துறைமுகத்தைப் பாவிக்க பல முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மற்றப் பக்கத்தில் சீனா கப்பல்களை இலங்கைக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது. அம்பாந்தோட்டையை கேட்டிருக்கிறது. அதைப்போல எந்தனையோ ஒப்பந்தங்களையும் சீனா கைச்சாத்திட்டுள்ளது.

உள்நாட்டு அரசியலைப் பார்த்தால் எங்கள் கண்ணுக்குத் தெரிகிற எதிர்காலத்தில் தென்னிலங்கையின் சிங்களப் பேரினவாதக்



அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

கட்சிகள் எந்தவொரு தேர்தலிலும் சிங்கள மக்களின் அறுதிப் பெரும்பான்மை வாக்கு கிடைக்க முடியாத நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கின்றன. இந்த இடத்தில் தமிழ் மக்கள் மிக முக்கிய தீர்மானிக்கிற சக்தியாக இருக்கின்றனர்.

**இப்படியான நிலையில் தமிழ் மக்கள் எதைச் செய்ய வேண்டும். அதே நேரம் வல்லரசுகள் எதனை விரும்புகின்றன எனக் கருதுகிறீர்கள்?**

தமிழ் முஸ்லீம் சிறுபான்மைகள் தான் மிக முக்கியமான தீர்மானிக்கின்ற சக்தியாக அமையப் போகின்றது. அதிலும் தமிழ் மக்களுடைய அரசியல் இதில் மிக முக்கியம் என்று நான் சொல்வதற்கான காரணம் என்னவென்றால், தமிழ் மக்கள் ஒரு கொள்கையோடு பயணிக்கின்றவர்கள், தமிழ்த் தேசிய உணர்வோடு இருக்கின்றவர்கள். ஆகவே தேசியத்திற்கு நேர்மையாக யார் செயற்படுகிறார்கள் என்று நினைக்கிறார்களோ, எந்தத் தரப்பில் விசுவாசம் கொள்கிறார்களோ, எந்தத் தரப்பிற்கு ஒற்றுமையாக வாக்களிக்க முடிவெடுக்கிறார்களோ அந்தத் தரப்பிற்கு பல மடங்காக தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பிற்பாடு, புலிகள் அமைப்பின் தலைமைத்துவத்தில் இருந்த விசுவாசத்தால் போராட்டம் மௌனிக்கப்பட்ட பிற்பாடும் கூட அந்த தலைமைத்துவம் காட்டிச் சென்ற கூட்டமைப்பு என்று கண்ணை மூடிக்கொன்று வாக்களிக்கிறார்கள். ஆனால், அது தலைவர் உருவாக்கிய கூட்டமைப்பு இது இல்லை. அது அந்த தலைவரின் கொள்கைக்கு நேர் எதிராக செயற்படுவதாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கின்றனர்.

ஆகவே எதிர்காலத்தில் அந்த நேர்மையான தமிழ்த் தேசியத்தை யார் முன்னெடுக்கிறார்களோ? அவர்கள் ஒட்டு மொத்த இலங்கை அரசியலை தீர்மானிக்கக்கூடிய பலம் வாய்ந்த ஒரு சக்தியாக நிலைநாட்டப்படுவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றது. இந்த நிலைமையில் சர்வதேச அரசியலில் வல்லரசுகள் தங்களுடைய விருப்பத்திற்கு



இணங்கி செயற்படக்கூடிய தரப்புகள் இருக்க வேண்டுமென்பதில் வலு அக்கறையாக இருக்கின்றன.

**வல்லரசுகள் ஏன் உங்களை எதிர்ப்பதாக கூறுகின்றீர்கள்?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறுகிற மக்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியான எங்களைத் தெரிவு செய்வதை ஏதோவொரு வகையில் தடுக்க வேண்டுமென்பதில் இந்த வல்லரசுகள் தெளிவாக இருக்கின்றன என்பது எங்களுக்குத் தெளிவாகத் விளங்குகின்றது. ஏனெனில் நேர்மையாக தமிழ் மக்களுடைய நலன்களை மையப்படுத்திய தமிழ் மகக்ளுடைய அடிப்படைக் கொள்கைகளை விட்டுக் கொடுக்காமல், இந்த மக்களுக்கு உழைக்கத் தயாராக இருக்கிற எங்கள் தரப்பை பலவீனப்படுத்துவதற்கும், எங்களை அந்த மாற்றுத் தெரிவாக மக்கள் அடையாளப் படுத்தாமல் திசை திருப்புவதற்கும் நடவடிக்கைககள் பலவற்றை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனடிப்படையில் இன்னொரு அணியை, அதாவது கூட்டமைப்பு கொண்ட அதே கொள்கையை, அதே நபர்களை கொண்ட ஆனால் முகமூடி மாட்டி வேறு பெயர்களில் இயங்குவதற்கான முயற்சியொன்று நடந்து கொண்டிருக்கிறது.

இதுதான் வல்லரசுகளின் இப்போதைய அரசியலாக உள்ளது. தமிழ் அரசியல் என்பது என்னைப் பொறுத்தவரையில் வரக் கூடிய பத்து, இருபது வருசத்திற்கு ஒரு முக்கியமான பேரம் பேசக் கூடிய பலம்வாய்ந்த இடத்தில் இருக்கப் போகின்றது. ஆக இங்கு கேள்வி என்னவென்றால், எங்கள் மக்கள் யாரைத் தெரிவு செய்யப் போகிறார்கள் என்பது தான். கடந்த 10 வருசமாக நாங்கள் சொன்ன விசயங்களை, மக்கள் அன்றைக்கு விளங்கிக் கொள்ளாவிட்டாலும், அன்று நாங்கள் முன்கூட்டியே சொன்ன விடயங்கள் அனைத்தும் இன்றைக்கு நிரூபிக்கப் பட்டுள்ளன.

எங்களைப் போன்ற தரப்பை பலப்படுத்துவதா? அல்லது கூட்டமைப்பை போன்ற இன்னொரு பெயரில் ‘மாற்று’ என்ற போர்வையில் இயங்கப் போகிற கூட்டமைப்பை பலப்படுத்தப் போகின்றனரா? என்பதே கேள்வியாக இருக்கப் போகிறது. அதாவது கூட்டமைப்பு






போன்று இன்னொரு பெயரில் இயங்கும் அமைப்பை மக்கள் தெரிவு செய்யப் போகின்றனர் என்றால், இந்தப் பத்து வருசத்தில் எப்படி மக்கள் ஏமாற்றப்பட்டு, இன்றைக்கு நடுத் தெருவில் இருக்கின்றனரோ? அது தொடரும். ஆகவே மக்கள் முடிவெடுக்க வேண்டும்.

***கூட்டமைப்பிற்கு மாற்றான அணி ஒன்றை உருவாக்க முயற்சிகள் எடுக்கப்படும் நிலையில் அதில் நீங்களும் இணைவதாக இருந்தும், தற்போது அந்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்திருப்பதாக சொல்லப்படுகின்றதே?***

தமிழ் மக்கள் இன்றைக்கு புதிய ஒரு மாற்று அணி என்று விரும்புவது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும், நீதியரசர் விக்னேஸ்வரனின் தரப்பு அணியும் ஒன்று சேர்வதைத்தான். அதைத்தான் எங்கு சென்றாலும் மக்கள் சொல்கின்றனர். இணைந்து வேலை செய்வதற்கு நாங்கள் தயார். அதனை கடந்த 2015ஆம் ஆண்டிலிருந்தே சொல்லிக் கொண்டு வருகின்றோம். அதற்கு எந்தத் தடையும் இல்லை. அதிலும் எங்கள் பக்கத்தில் இருந்து ஒரு தடையும் இல்லை.

ஆனால், நீதியரசர் விக்னேஸ்வரன் அதைச் செய்யாமல், இந்தக் கூட்டமைப்பு என்னென்ன பிழைகளைச் செய்ததோ? அல்லது செய்கின்றதோ? அந்தப் பிழைகளைச் செய்த ஈ.பி.ஆர்.எல். எப் அணியைச் சேர்க்காமல் எங்களுடன் வரத்தயார் இல்லை என்று நிபந்தனையைப் போடுகின்றார். இங்கு நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிழை என்று சொல்வது அவர்கள் கொள்கை ரீதியாக பிழை விடுவதற்காகவே தான்.

அந்தக் கொள்கையோடு எந்த விதமான தயக்கமும் இல்லாமல், அதே பிழைகளைச் செய்கிற ஈ.பி.ஆர்.எல். எப் அமைப்பை சேர்க்காமல் தான் இந்த கூட்டிற்கு வரத் தயார் இல்லை என்று ஒரு நிபந்தனையைப் போடுவதால், இந்த கூட்டு சேர்வதற்கான வாய்ப்புகளை விக்னேஸ்வரன் ஐயா இல்லாமல் செய்கின்றார்.

எனவே, கொள்கையில் அடிப்படையில் கொள்கையை விட்டுக் கொடுக்காமல், நேர்மையாக இந்த மக்களுக்கு உழைக்கத் தயாராக இருக்கக் கூடிய தரப்புக்களை விக்னேஸ்வரன் ஐயா கூட்டுச் சேர்ப்பதற்கு எங்களுக்கு ஒரு பிரச்சனையும் இல்லை. அதைச் செய்யாமல் பிழையான தரப்புக்களை, அதாவது கொள்கையில்லாத தரப்புகளைச் சேர்த்து வெறுமனே எண்ணிக்கையைக் காட்டுவதற்காகவோ, தேர்தல் அரசியலில் பதவிகளை எடுப்பதற்காகவோ அல்லது, வேறு எதற்காகவோ அவர் அப்படி யோசிக்கின்றார் அல்லது வெறுமனே

கூட்டமைப்பை தோற்கடிப்பதற்காக என்று சொல்வதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்து அல்ல. ஆகையினால் மக்கள் முடிவெடுக்கட்டும். எங்களைப் பொறுத்தவரையில் தெரிந்து கொண்டும் அதாவது இது ஒரு நாளும் எங்களின் மக்களின் நலன்களுக்கான கூட்டாக அல்லாமல் ஈ.பி. ஆர்.எல்.எப் போன்ற அமைப்புகளை சேர்த்துக் கொண்டால் நேர்மையாக மக்களுக்கு உழைக்க முடியாது என்று தெரிந்து கொண்டு நாங்கள் அந்தப் பிழையைச் செய்வதற்கு தயாரில்லை.

**கடந்த 2015ஆம் ஆண்டு முதல் விக்னேஸ்வரனுடன் இணைந்து செயற்படத் தயாரெனக் கூறியிருக்கின்றீர்கள். அதே போன்ற கடந்த 2018ஆம் ஆண்டும் ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் சுரேஸ் பிரேமச்சந்திரன் தரப்போடும் இணைந்து கூட்டாக செயற்பட முன்வந்திருந்தீர்கள். ஆனால், இப்போது ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பு கொள்கையில்லாதது விக்னேஸ்வரனின் கூட்டில் அந்த அமைப்பு வேண்டாம் என்று ஏன் கூறுகின்றீர்கள்?**

இதற்கு காரணம் என்னவெனில் முதலாவதாக துரோகிகளாக அடையாளப் படுத்தப்பட்ட உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட கடந்த 2018இல் தான் ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பு முடிவெடுக்கின்றது. அதிலும் எங்களுடன் சேராமல் இனத்தைக் காட்டிக் கொடுத்த துரோகிகள் என்று சொல்லி கூட்டமைப்பால் வெளியேற்றப்பட்ட உதயசூரியனோடு சேரவேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எப் முடிவெடுக்கிறது. இவ்வளவு காலமும் வேலை செய்த எங்களோடு சேர்ந்து வேலை செய்யாமல் எங்களோடு இணையாமல் எங்களைக் கடைசி நேரத்தில் கைவிட்டுவிட்டு உதயசூரியனோடு சேர்கின்றனர்.

இந்தப் போராட்டம் அதிலும் இயக்கத்தைப் பற்றி இப்போது தம்பி பிரபாகரன் என்று நிறையப் பேர் கதைக்கின்றனர் தானே. அந்த தம்பி பிரபாகரன் யாரைத் துரோகியாக அடையாளப்படுத்தி கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றினாரோ அந்த தரப்போடு சேர்ந்தது சரியானதா? இரண்டாவதாக மகிந்த ராஜபக்சவும் அவரது கட்சி சார்ந்தவர்களும் இனப்படுகொலையாளிகள் என்று நாங்கள் சுட்டிக்காட்டுகின்றோமோ அந்த இனப்படுகொலையாளிகளோடு இந்தத் தேர்தலுக்குப் பின்னர் ஒப்பந்தம் செய்து வவுனியா வடக்கில் நெடுங்கேணி பிரதேச சபையில் ஆட்சி பிடிப்பதற்கு முடிவெடுத்தனர்.

அதேபோல யார் யாருடன் எல்லாம்







வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
17ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
மங்கையர் மனதை
கொள்ளைக் கொள்ளும்
பட்டுச் சேலைகள் யுற்ரொப்ஸ், சிமோக்,
லேஸ், நெற்ஸ், லேசர் ரிசு சேலைகள்,
அனார்கலி பட்டியாலா பஞ்சாபிகள்,
பாவாடைத் தாவணிகள்,
காகிறாச் சோலிகளுடன்
ஆடவர்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்
யாரும் கண்டிராத
மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
மாபெரும்
ராஜ
முத்திரை
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்தி மஹால் மண்டபம்

சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும்
உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில்
மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...


திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து
வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை
அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும்
குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்



**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K.KOWTHAMAN | S.MANIVANNAN | K. VIJAYASURESH |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

web : www.varasithy-mahall.ch mail : vasasithymahall@hotmail.com

கூட்டமைப்பு கூட்டு சேர்ந்ததால் நாங்கள் துரோகிகள் என்று சொன்னோமோ அவர்களுடன் எல்லாம் ஈ.பி.ஆர்.எல். எப் அமைப்பும் கூட்டுச் சேர்ந்தது. இதற்கமைய ஆட்சியையும் பிடித்தது. அதை எப்படி நாங்கள் நியாயப்படுத்தலாம். ஆக கூட்டமைப்பு கொள்கையில் பிழை என்று சொல்லி அவர்களை நாங்கள் நிராகரிக்க வேண்டும் அழிக்க வேண்டும் என்று சொல்கிறோம் என்றால் அந்த விமர்சனத் தன்மைக்கு ஒரு நேர்மைத்தன்மை இருக்க வேண்டுமா இல்லையா?

கூட்டமைப்பு பிழை விடுகிறது அவர்களை நிராகரிக்க வேண்டுமென்று நாங்கள் சொன்னோமென்று சொன்னால் அதே பிழையை அல்லது அதை விட மோசமாக ஈ.பி. ஆர்.எல்.எப் அமைப்பு இழைத்திருக்கிறது. அதாவது கூட்டமைப்பு தாமரை மொட்டு ராஜபக்சவுடன் சேரவில்லை. ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பு தாமரை மொட்டுடனும் கூட்டு சேர்ந்தது.

அப்படியாக கூட்டமைப்பிலும் விட மோசமாக செயற்படும் ஒரு தரப்பை எங்கள் அணிக்குள் வைத்துக்கொண்டு கூட்டமைப்பு பிழை என்று கையை நீட்டி விரல் காட்டி பேச எப்படி எங்களுக்கு முதுகெலும்பு இருக்கும். அதில் ஒரு நியாயத்தன்மை இருக்க வேண்டும் தானே. ஒரு தரப்பிற்கு எதிராக விமர்சனம் முன்வைக்கிறோம் என்றால் அதில் நேர்மை தன்மை இருக்க வேண்டும். இது தான் நிலைமை.

இதில் முக்கியமாக விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவென்றால் ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பை எப்பபோது பிழை என்று நாங்கள் சொல்கிறோம் என்பது தான். அது எப்போது என்றால் கடந்த தேர்தலில் தமிழ் மக்களின் பேரவையின் தீர்வுத் திட்டத்தை உதாசீனம் செய்து அதை முன்னிலைப் படுத்தாமல் விடுதலைப் போராட்டம் துரோகிகள் என்று அடையாளப்படுத்திய உதய சூரியனின் போட்டியிட்டு தேர்தல் முடிந்த பிறகு மிக மோசமாக தாமரை மொட்டுடன் ஈ.பி.ஆர்.எல்.எப் சேர்ந்தது தான்.

அதுபோல ஐக்கிய தேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுடன் சேர்ந்ததும் பிழை என்று சொல்கிறோம். ஆனால் மண்டையன் குழு காலத்தில் செய்த காட்டிக் கொடுப்பு விசயங்கள் கொலைகளையும் வைத்துக் கொண்டு நாங்கள் சொல்ல வில்லை. இன்றைக்கு ஈ.பி.ஆர்.எல். எப் அமைப்பு நடந்து கொண்ட விடயங்களை வைத்து தான் இவர்களுடன் சேரமுடியாது என்று கூறுகின்றோம்.

**நேர்காணல்**
**அடுத்த இதழில் தொடரும்...**

ஆசியா சமுத்திரம்
Asiatischer Supermarkt

R.RAGUNATHAN
Parkhofstrasse 101
41836 Hückelhoven
+ 49 24 33 / 44 69 007

T. ANBALAGAN
Sittardstrasse 21
41061 Mönchengladbach
+ 49 21 61 / 90 28 388

IBAN : DE55 3907 0024 0474 1153 00 BIC : DEUT DE DB 390

## அவனா? இவன்!

சென்ற இதழில் பள்ளிக் காதல் பற்றிப் பார்த்தோம். அது எமது தமிழ் பழங்கால மக்களின் கடவுளாக தொழப்படும் கந்தன் அல்லது முருகன் வள்ளி காதல் போன்ற இயல்பான தன்னிச்சையான பாலியல் உணர்வுகளால் பிறந்த காதல் அல்ல. இன்று நவீன உடை, மேக் அப், மை, அலங்கார கவர்ச்சிகளால் செயற்கையாக வருவிக்கப்படும் ஒரு தலைக் காதல்களின் காலம்.

ஆனால், அந்தப் பழங்காலத்து மக்களின் முருகன் வள்ளி காதல், சங்க காலத்தில் செம்பாட்டு மண் மேல் பெய்த மழை நீர் எப்படி நிரந்தரமாகத் தன் நிறமும், இயல்பும் மாறி விடுவது போல, காதல் கொண்ட ஆண் பெண் ஆகிய இருவரின் உள்ளங்களும் மாறிய காலம் கண்டு, திருவள்ளுவர் காலத்தில் 'நான் நோக்கும் காலை வான் நோக்கிய' பெண் கம்பன் காலத்தில், "அவனும் நோக்கினான், அவளும் நோக்கினாள்" என்கிற நிலை போய்விட்டது.

கண்ணதாசன் காலத்தில் 'உன்னை நான் பார்க்கும் போது, மண்ணை நீ பார்க்கின்றாயே' என்ற நிலையும் கடந்து விட்டது. இன்று தன் சுய விருப்புகளை மட்டுமே பெறத் தன்னுடலை விற்று வரும் பெண்களையும், பெண் உடலின் சுகத்தைப் பெற என்ன விலையும் கொடுத்து விட்டு, ஊசிப் போன வடைக்கு ஆசைப்பட்டு, பொறிக்குள் சிக்கி உயிருக்குப் போராடும் எலிகளாக ஆண்கள் செய்யும் காதல் நாடகமாக மாறி விட்டது.

பெண் பிள்ளைகளை வைத்து தாய்மார் ஆடும் அதிகாரப் போட்டியால் திருமணங்கள் முறிந்து போகும் தொகை தினமும் அதிகரித்து வருகிறது. பயத்தால் ஆண்கள் திருமணத்தை வெறுக்கிறார்கள். தினமும் வரும் தொலைக்காட்சித் தொடர்களில் பெண்களின் கொடூர உளக் கிடைக்கைகளால் கவரப்பட்ட அடிமைகளாக எமது தாய்க்குலம் மாறிவிட்டது. அவை எல்லாக் குடும்பங்களிலும் எதிரொலிக்கின்றன.

அதன் பலனாய் பல குடும்பங்களில் தினமும் இத்தொடர்

# ஞாபகம் வருதே...!



காட்சி நாயகிகளே அதிகாரம் செலுத்துவதால் பெரும்பாலான திருமண முறிவுகள் ஏற்படுகின்றன. இவை அசுர வேகத்தில் அதிகரிப்பதால் திருமணமே இல்லாத கூடிக் கிடக்கும் கலாச்சாரம் பெருகி வருகிறது.



இந்தக் காம விளையாட்டில் பிறக்காமல் போன பிள்ளைகள் அதிர்ஷ்டசாலிகள், கொடுத்து வைத்த பாக்கியவான்கள். தினமும் போராடும் பெற்றோர்களுக்கு மத்தியில் சிக்கிச் சிதறுண்டு, சிதறிப் போகும் சிதறு தேங்காய்கள். தமது பெற்றோர்கள் எவ்வளவு கவனம் எடுத்து, தம்மிலும் உயர்வான நிலைக்குப் பாடுபட்டு வளர்த்தார்கள் என்பதை நன்றியுடன் நினைக்க மறந்த நம்பிக்கைத் துரோகிகள்.

இத்தகைய நம்பிக்கைத் துரோகிகளாக எமது இனம் மாறியதால், ஈழத் தமிழ் இனமே அழிவதற்கு போரிடத் தயாரில்லாத கோழை மக்களாய், சுகவாழ்வு தேடிப் பரதேசம் ஓடிப் பரதேசி அடிமைகளாய், புலம் பெயர்ந்த நாம் ஒரு சர்வதேச அடிமைகள் இனத்தை உருவாக்கி விட்டோமா? என்கிற பீதி இன்று அவனுள் எழுந்து விட்டது. எதிர் காலம் அவனது பயத்தைப் போக்குமா? அல்லது உறுதிப் படுத்துமா? என்று அலை மோதும் நினைவுகளோடு அவன் காத்திருக்கிறான்.

(மீண்டும் வருவான்)


BEST PRICE

Milin Impex GmbH

Indische Lebernsmittel GroBhandel

மலிவான தரமான மளிகைப் பொருட்களின் மொத்த, சில்லறை விற்பனையாளர்



எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
10:00 முதல் 18:00 மணி வரை திறந்திருக்கும்

எமது மலிவு விலைகளை அறிந்து கொள்ள....

www.milinimpex.de

Westendorf Str 41,
44287 Dortmund

Tel : 0231 459628 / 01725868366 info@milinimpex.de



# இரண்டாம் தாரம்

சிறுகதை

இன்று வெள்ளிக் கிழமை. வேலை நான்கு மணிக்கே முடிந்துவிடும் என்பதனால், அனேகமாக எல்லோரும் பதினைந்து நிமிடம் முன்னதாகவே புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்து விடுவார்கள். சரியாக நான்கு மணியாகும் போது முதலில் வங்கியை விட்டு வெளியே வருபவள் காஞ்சனாதான்.

காஞ்சனா யாழ்ப்பாணத்தில் ஒரு வங்கியில் பொறுப்பான அதிகாரியாக வேலை செய்கின்றாள். எப்பொழுதுமே வெள்ளிக் கிழமைகளில் அவள் அப்படித்தான். அவளின் சொந்த ஊர் நயினாதீவு. வெள்ளிக்கிழமை மாலை தனது ஊருக்குப் போய், திங்கட்கிழமை காலைதான் திரும்பவும் யாழ்ப்பாணம் வருவாள். யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகட்டுவான் துறைமுகம் வரை பஸ் பயணம், ஒரு மணி நேரமாகும். பின்பு கடல் பயணம், இருபது நிமிடம் எடுக்கும். அப்புறம் சிறிது நடை, ஆனால், இவைகளுக்காக காவல் நிற்கும் நேரம் இதைவிட அதிகம்! எப்படியும் வீடு போய்ச் சேர மூன்று மணி நேரமாவது பிடிக்கும்.

போன வாரம் இவள் ஊரில் இருந்து திரும்பி வரும்போது, அம்மாவின் இடுப்பில் சோர்வாக இருந்து கொண்டு, எதுவும் பேசாமல் இவளையே ஏக்கத்துடன் பார்த்து கொண்டிருந்த தீபாவின் முகமே, மனம் முழுவதும் நிரம்பி வழிந்தது. இப்போது எப்படி இருக்கிறாளோ? “அடுத்த நாளே எல்லாம் சரியாப் போச்சு!. நீ பதட்டப் படமால் ஆறுதலாக வா” என அம்மா தொலைபேசியில் சொன்னதில், மனம் கொஞ்சம் ஆறுதலடைந்தது!. இருந்தாலும் சீக்கிரமாகப் போக வேண்டும் என மனம் அவசரப்படுத்தியது.

காஞ்சனாவின் கணவர் செந்தில், யாழ் கச்சேரியில் ஒரு வேலை செய்கின்றார். செந்திலின் சொந்த ஊர் காங்கேசன் துறை. அங்கிருந்தே வேலைக்கு வந்து போவது ஒன்றும் பெரிய சிரமமில்லை. காஞ்சனாவைக் கல்யாணம் செய்யும்வரை அப்படித்தான் செய்து வந்தார். திருமணமான பின்னர் இருவருக்கும் வசதியாக இருக்கும் என்பதனால், யாழ்ப்பாணத்திலலேயே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தங்கி விட்டார்கள்.

கல்யாணமான புதிதில் காஞ்சனா, கணவன் செந்தில் என இருவருமாகத்தான் வார நாட்களில் காஞ்சனாவின் தாய் வீட்டிற்குப் போய் வருவார்கள். இப்பொழுதெல்லாம் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி, காஞ்சனாவின் வீட்டுக்குப் போவதை செந்தில் தவிர்த்தே வந்தான். இன்றும் அப்படித்தான். தனக்கு இங்கு முக்கியமான சில வேலைகள் இருப்பதால் காஞ்சனாவையே

போய்வரும்படி தொலைபேசியில் தகவல் சொல்லியதால், அவளும் தனியாகவே புறப்பட்டு விட்டாள்.

வீடு வந்ததும் அவளிடம் தாவிய தீபாவை தூக்கிக் கொஞ்சிய பின்தான் அவளால் இயல்புக்கு வரமுடிந்தது. தீபாவை மடியில் வைத்துக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்த காஞ்சனாவைப் பார்த்து “குழந்தையைக் கொஞ்சம் கீழே இறக்கி விட்டுவிட்டு, நிம்மதியாகத்தான் சாப்பிடேன். இரண்டு நாள் இங்கேதானே நிக்கப்போறே!” என தாயார் அலுத்துக் கொண்டார்கள். ஆனாலும், காஞ்சனா தீபாவை மடியில் வைத்துக்கொண்டே சாப்பிட்டாள்! காஞ்சனாவின் தாயாருக்கு தனது மகளைப்பற்றிய கவலை! காஞ்சனாவிற்கு தனது மகளைப் பற்றிய கவலை!!

“போன தடவைகூட மாப்பிள்ளை வரவில்லையேம்மா. அவருக்கு என்ன?” என்ற தாயாரின் கேள்விக்கு பதில் சொல்லவே இல்லை காஞ்சனா. அவளின் சிந்தனை பழைய நினைவுகளை இரை மீட்டிக் கொண்டிருந்தது.

அம்மாவிற்கும், அப்பாவிற்கும் தங்களின் ஒரே மகள், அதுவும் சின்ன வயதிலேயே கணவனை இழந்துவிட்ட தங்கள் செல்ல மகளை, இரண்டாம் தாரமாக திருமணம் செய்து வாழ்வளித்த செந்தில் தெய்வமாகவே தெரிந்தார். மருமகனின் மனம் கோணாமல் இருப்பதற்கு அவர்களால் என்னவெல்லாம் செய்ய முடியுமோ? அத்தனையும் செய்ததோடு, காஞ்சனாவையும் அப்படியே நடக்குமாறே அறிவுறுத்தினார்கள். அதில் ஒன்றுதான் தீபாவை கொஞ்சம் பெரியவள் ஆகும்வரை தாங்களே வளர்க்கின்றோம் எனச் சொன்னது.

திருமணப் பேச்சு நடைபெற்ற போது, இப்படியாக யாருமே சொல்லவில்லை. இப்பொழுது தனது பெற்றோர்களே இப்படிச் சொன்னதும் காஞ்சனா தவித்துப் போனாள்.

“என்னம்மா! தீபாவை விட்டுவிட்டு என்னால் எப்படி இருக்க முடியும்?. அவளும் என்னை விட்டிட்டு இருக்கமாட்டாள் என்று தவித்தபடி செந்திலைப் பார்க்க, அவனும் “அவர்கள் சொல்வது சரியாகத்தான் இருக்கு. நாங்கள் கொஞ்சம் செட்டிலாகீட்டு, அப்புறமா குழந்தையைக் கூட்டிக்கொண்டு போகலாம்,னுதான் நானும் நினைக்கிறன்”




என்றதும் அவளால் எதுவும் சொல்ல முடியவில்லை.

ஆரம்பத்தில் லீவு நாட்களில் காஞ்சனாவுடன் வந்து போன செந்திலுக்கு, தாய்வீடு வந்ததும் காஞ்சனா சதா நேரமும் மகளுடனேயே இருப்பது எரிச்சலாகவே இருந்தது. காலப்போக்கில் அங்கு வருவதை செந்தில் கொஞ்சம், கொஞ்சமாகக் குறைத்து விட்டான். இப்பொழுது தீபாவிற்கு பள்ளிக்கூடம் போகும் வயது வந்து விட்டது. இனியும் தீபாவை இங்கு விட்டுவிடுவது அவளின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல. இனி தீபாவை தங்களுடன் யாழ்ப்பாணத்தில் வைத்திருந்தால் தான் அவளை நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்க்க முடியும் என்பதை உணர்ந்த காஞ்சனா, அதற்கான முயற்சிகளில் இறங்கலானாள்.

இரண்டு நாட்களும் நொடியாய்க் கரைந்துவிட, ஊரில் இருந்து யாழ்ப்பாணம் வந்தவள் நேராக தான் வேலை செய்யும் வங்கிக்குப் போகும் வரை, செந்திலிடம் இருந்து போன்கூட இல்லை! மாலை வேலை முடிந்து வந்தவளை, பூட்டிய வீடுதான் வரவேற்றது. எட்டு மணி போல் வீட்டுக்கு வந்த செந்தில் காஞ்சனாவிடம், ஊர் பற்றி எந்த விசாரிப்பும் இல்லை! எதுவுமே நடக்காதது போல சாப்பிட்டுவிட்டு படுத்து விட்டான்.

“என்னுடன் பேசாதே!” என்று சொல்வதைப் போலவே மனைவியை விட்டு தூரத்திலேயே நின்றான் செந்தில். அவன் முகத்தில் ஒரு கடினம் இருந்ததை காஞ்சனாவால் உணர முடிந்தது. இவைக்கெல்லம் காரணம், தன் மகளைப் பார்க்க ஊருக்குப் போவது பிடிக்கவில்லை என்பதின் வெளிப்பாடுதான் என்பதை காஞ்சனா உணராமல் இல்லை!.

பத்துப் பொருத்தமும் பொருந்தியிருக்கின்றது. நல்ல வேலை, வசதியான இடம், அழகான பையன் என்று தேடிப்பிடித்த மாப்பிள்ளை, கல்யாணமான ஆறே மாதத்தில் மூன்றுமாத கர்ப்பிணியாக இருந்த போது, விபத்தில் இறந்துவிட்ட அதிர்ச்சியில் இருந்து ஆறுதலடைவதற்குக் காரணமே குழந்தை தீபாதான். அந்த குழந்தைக்கு எதிர்காலத்தில் ஒரு பாதுகாப்பு வேண்டும் என்றால், கண்டிப்பாக அவளுக்கொரு அப்பா வேண்டும் என்ற பெற்றோரின் வற்புறுத்தலால், இரண்டாவது திருமணத்திற்குச் சம்மதித்தாள் காஞ்சனா.

“திருமணமாகி கைக் குழந்தையுடன் இருக்கும் கைம் பெண்ணுக்கு, பரந்த மனப்பான்மையுள்ள வரன் தேவை” எனப் பத்திரிகையில் விளம்பரம் செய்ய, அதைப் பார்த்த ஒரு கல்யாணத் தரகர் மூலமாக மாப்பிள்ளையாக வந்தவர்தான் செந்தில்.

“எனக்கு அப்பா, அம்மா இல்லை! ஒரு அக்காதான். அவளும் திருமணமாகி சென்றுவிட்டாள். இது நான் வேலை பார்க்கும் முகவரி” என்று சொல்லி தனது முகவரி அட்டையைக் கொடுத்த செந்தில் “நல்லா விசாரிச்சுப் பாருங்க!. எனக்கு உங்க பெண்ணைப் பிடிச்சிருக்கு. என்னைப் பிடிச்சிருக்கா? என அவங்களையும் கேளுங்க!. அவங்க சம்மதம்தான் முக்கியம்” என பரம சாதுவாக ஜென்டில்மேன் முகத்துடன் பேசியது இவன்தானா? காஞ்சனாவால் இப்பொழுது நம்ப முடியவில்லை.

காஞ்சனாவின் பெற்றோர்கள் எதை நினைத்து குழந்தை தங்களுடன் வளரட்டும் என்று சொன்னார்களோ? அதுதான் இப்பொழுது நடக்கின்றது!. கல்யாணமான சில வாரங்களிலேயே செந்திலின் நோக்கம் காஞ்சனாவிற்கு புரிய ஆரம்பித்தது. ஆனால், அதன் சிறு துளிகூட தன் பெற்றோருக்கு தெரியக் கூடாது என்றுதான் அவள் போராடினாள். ஆனால், காஞ்சானாவுடன் ஊருக்கு வருவதை




Chairman
SADIK BASHA.M
LIMRA
BAGS
Pvt. Ltd.,
Online Shopping : www. limramart.com
No.14, Pensioner Street, Thennur,
Trichy - 620 017. Tamilnadu, India.
Touch with us : 0431 - 4346053,
Mob : +91 97861 14635.
domesticlimra@gmail.com
www.limrabags.in

தொடர்ச்சியாக செந்தில் தவிர்த்து வரும்போதே, அவர்களும் கொஞ்சமாக சந்தேகப் பட ஆரம்பித்தாலும், தாங்கள் சந்தேகப் படுவதை மகளுக்குக் காட்டிக் கொள்வதில்லை.

இரண்டாம் தாரம் என்றாலும் பரவாயில்லை, என செந்தில் காஞ்சனாவைக் கல்யாணம் செய்வதற்கு பரந்த மனப்பானமை ஒன்றும் செந்திலிடம் இருக்கவில்லை! அவனது நோக்கமெல்லாம் வங்கியில் பார்க்கும் வேலை, நல்ல சம்பளம், ஒரே பெண் என்தால் எப்படியும் பின்னாளில் வரப்போகும் சொத்து, இவைகள்தான்; காரணம் எனத் தெரிந்த நாட்களில் தொடங்கியது முதல் அதிர்ச்சி!

மனைவியாக தன் கடமைகளைச் சரியாகச் செய்தும் செந்திலின் அலட்சியம், குத்தலான பேச்சுக்கள் எல்லாம் அவளை வேதனைக்குள்ளாக்க, தீபா தன்னுடன் இருப்பதுதான் தனக்கு நிம்மதி, தீபாவிற்கும் பாதுகாப்பு என நினைத்த காஞ்சனா, அதற்கான வேலைகளை கொஞ்சம் கொஞ்சமாக செய்ய ஆரம்பித்தாள், செந்திலுக்குத் தெரியாமலேயே!.

தீபாவை தன்னுடன் வைத்திருப்பதை செந்தில் விரும்ப மாட்டார். அவர் விரும்பாததை நான் செய்தால் என்ன நடக்கும்? எங்களுக்குள் விரிசல் வரும்! அந்த விரிசல் எப்படியானதாக இருக்கும்? அதற்குப் பின் தான் என்ன செய்ய வேண்டும்? இதையெல்லாம் ஆழமாக சிந்தித்துத்தான் காஞ்சனா அப்படியான தொரு முடிவை எடுத்திருந்தாள்.

மாலை அவள் வீடு வந்தபோது, கதவு திறந்திருந்ததில் இருந்து செந்தில் வீட்டில் தான் இருக்கின்றார் எனத் தெரிந்தது. வீடுக்குள் வந்த அவளை, கொஞ்சமும் கண்டு கொள்ளாமல், டிவியைப் பார்த்துக் கொண்டிருந்தான் செந்தில்.

“அப்பவே வந்தீட்டிங்களா? காப்பி போட்டுத் தரட்டுமா?” என சாதாரணமாக கேட்பது போலவே கேட்டாள் காஞ்சனா.

“சாப்பிடுற நேரமாச்சு!, சீக்கிரமா சாப்பாட்டை ரெடி பண்ணு” டி.வியில் இருந்து தலையைத் திருப்பாமலேயே அவன் சொல்ல, புடவையை இழுத்து இடுப்பில் செருகிக்கொண்டே சமையலறைக்குள் சென்றாள் காஞ்சனா.

சாப்பிட்டுவிட்டு மறுபடியும் டி.வி முன் உட்கார்ந்தவனிடம் மெதுவாக அந்த பேப்பரை நீட்டினாள் காஞ்சனா. கையில் வாங்காமலேயே “என்ன இது?”






புதுப்பொலிவுடன் மீண்டும்....
ESTD 1992
மங்கையரின் மனங் கவரும்
2019 வருடத்திற்கான
புத்தம் புதிய ஆடைகள்
Gopara Gnanam
Rheinische Str.62
44147 Dortmund
Mob.: 0171 330 65 42,
0176 246 54 009
Wedding Sarees
DISCOUNT!!

என்றவனிடம், “இந்த வருடம் தீபாவை எங்களோடேயே கூட்டியந்து வைச்சிருக்கப் போறன். அவளை பள்ளிக்கூடத்திலை சேர்க்க வேணும். அதுதான் அப்பிளிக்கேசன். ஒரு கையொப்பம் போடுங்க”.

“யாரைக் கேட்டு இதெல்லாம் பண்ணுறாய்?” அவன் கோபமாகக் கேட்டான்.

“யாரைக் கேக்க வேணும்? இது நம்ம குழந்தை” காஞ்சனா கோபப்படாமல் நிதானமாகவே சொன்னாள்.

“நம்ம குழந்தை இல்லை! அது உன் குழந்தை! அவ அங்கேயே இருக்கட்டும். உங்க அம்மா, அப்பாவாலை முடியிறவரை பாக்கட்டும். முடியாமல் போனா பணத்தைக் கட்டி ஏதாவது ஹாஸ்றல்லை சேத்திடலாம். நான் ஏற்கனவே உங்க அம்மா, அப்பாகிட்டையெல்லாம் பேசீட்டன். அவங்களும் சரியென்னு சொல்லீட்டாங்க” அத்துடன் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்கப் பார்த்தான் செந்தில். ஆனால் காஞ்சனா அப்படிப் பத்திரகாளியாக மாறுவாள் என அவன் எதிர்பார்க்கவில்லை!.

“என் பிள்ளையைப் பற்றி நீங்க என்னங்க என அம்மா, அப்பாகிட்டை சொல்லுறது? அவங்க யாருங்க அதுக்கு சரி என்று சம்மதம் சொல்லுறது? இப்ப நீங்க சொன்னீங்களே, இது நம்ம குழந்தை இல்லை, என் குழந்தை என்று. ஆமாங்க! இது என் குழந்தை. என் குழந்தை பற்றி நான்தான் முடிவு எடுப்பேன். அந்தப் பேப்பரிலை நான் கையெழுத்துப் போடுறன். இந்தப் பேப்பரிலை நீங்க கையெழுத்துப் போடுங்க” வேறொரு விண்ணப்பப்படிவத்தை நீட்டினாள் காஞ்சனா.

“இது என்ன?”

“விவாகரத்துப் பத்திரம்” நிதானமாகச் சொன்னாள் காஞ்சனா!

விக்கித்துப் போய் நின்றான் செந்தில்.



# V one DISTRIBUTION

**Rheinische Str. 70 44137 Dortmund**

T 0231 330 16 114 ✉ V-ONE@outlook.de

Handy Verträge ab 1,- €
Handy Zubehör
Handys
Handy Reparatur
Festnetz DSL
Prepaid SIM
Prepaid Guthaben

KFZ Gutachten
Passbilder
Event Fotos& Videos

Privat Kredit

Handy Versicherung
KFZ Versicherung
Haftplicht Versicherung
und vieles mehr...

vodafone
YUPPTV
ay yıldız
dpd Pickup
FLiXBUS
Lyca mobile Call the world for less
Lyca TV
WESTERN UNION WU moving money for better
BLACK DIAMOND
ortel MOBILE
Ria Money Transfer
LEBARA
yourfone
T · · Mobile ·
$O_2$
MoneyGram
KFZ-SACHVERSTÄNDIGER AMBERG
unitymedia
1&1
OTELO




17 ம் நூற்றாண்டில்



21ம் நூற்றாண்டில்

பாகம்.89 அன்புச் செல்வன்

ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம் ?

# எப்படி இருந்த நாம் இன்று இப்படிக்கூட இல்லையே!

# எப்படி?

இந்த 17ம் நூற்றாண்டு வரை படம், போர்த்துக்கீச ஆட்சியாளர்களால் அவர்களது ஆட்சி அதிகாரத்தில் கொண்டு வரப்பட்ட பிரதேசங்களை காட்டுகிறது. வெண் சிவப்பு நிறம் அவர்களால் பிடிக்கப்பட்ட பகுதிகள்.

வெண் பச்சை வன்னிய அரசர்களின் ஆள் நிலப் பகுதிகள். அதாவது கடைசி வன்னித் தமிழ் அரசன் பண்டார வன்னியன் ஆட்சி செய்த ஈழத் தமிழர்களுக்கே உரியதான தாயகப் பிரதேசம். அதற்கு வடக்கே போர்த்துக் கேயரால் ஆக்கிரமிப்புக்கு உள்ளான மன்னார் முல்லைத் தீவு உள்ளிட்ட யாழ்ப்பாண அரசன் சங்கிலிய மன்னின் ஆள் புலம்.

மஞ்சள் நிறம் கண்டிய மன்னனின் ஆள் புலம். பண்டார வன்னியன் ஆங்கிலேயரால் வெற்றி கொள்ளப்படும் வரை அது தமிழரின் நிலம். இவற்றோடு கண்டி அரசன் ஆளுகைக்கு உள்ளான கிழக்கு மாகாணத்தின் தெற்கு எல்லை குமுக்கன் ஓயா ஆற்று கடலில் சேரும் முகத்துவாரம் வரைக்கும் நீண்ட நிலப்பரப்பு, மேற்கே பொலன்நறுவை கல்முனை அம்பாறை திரிகோணமலை பிரதேசங்களை தமிழர் தாயகம் கொண்டிருந்தது.

பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் சிங்களமும், கத்தோலிக்க மதமாற்றமும் தமிழ் மக்களையும், தமிழர் பிரதேசங்களையும் மாகாண எல்லைச் சீராய்வு எனச் சிங்களப் பிரதேசங்களாக்கி, புத்தளம் நீர் கொழும்பு சிலாபம் இறாகமை கெந்தலை வத்தலைப் பிரதேசத் தமிழர்களைச் சிங்களவர்கள் ஆக்கியும், அப்பகுதிகளைச் சிங்களக் கிராமங்கள் ஆக்கியும், திட்டமிட்ட தமிழின அழிப்பைச் செய்து விட்டனர். இவற்றோடு கண்டி நுவரெலியா பதுளை மாத்தளையும் தமிழரின் நிலங்களே!.

“கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது” போல இன்று, 1980களில் இருந்த தமிழர் நிலங்கள் பறி கொடுத்த பின்னரும், கூட்டாக தமிழினம் வாழ முடியும், வாழ வேண்டும் என எமது அரசியல் தலைவர்கள் பேசுவதும், சிங்களப் பெரும்பான்மை அரசியலில் பங்கு பெற, தேர்தல்களில் முண்டி அடித்து மோதிக் கொள்வதையும் தமிழ் மக்கள் எப்படிச் சகித்து மன்னிப்பது?

இது விடயமாக கொழும்பு ரெலிகிராஃப் என்னும் ஆங்கில இணையத் தளத்தில் ஏப்ரல் 21ந் திகதி ‘உயிர்த்த ஞாயிறு’ இஸ்லாமிய பயங்கரவாதிகளின் கத்தோலிக்கத் தமிழ் மக்களைக் குறி வைத்து நடத்தப்பட்ட

குண்டுத் தாக்குதல் தொடர்பாக, ‘மலை ஊரான்’ என்ற பெயரில் ஆங்கிலத்தில் பதிவு செய்த, துணிச்சலான கருத்துகளின் தமிழ் வடிவத்தை தருகிறோம். அதனைப் படித்த பின்னராவது எமக்குச் சூடு, சொரணை வருகிறதா? எனப் பார்க்கலாம்.

## தமிழாக்கம்:-

**மலைஊரான் - மே - 09, 2019**

தமிழர்களுக்குத் தனியாகப் போவதைத் தவிர வேறு வழி இல்லை! குண்டுகளைத் தயாரித்த அனைவருமே வெளியே போக விடப்பட்டு விட்டனர். ஆனால், தமிழ் பெயரைக் கொண்ட ஒரு நபர் மட்டும் குண்டுத் தயாரிப்பில் எவ்வித தொடர்பும் இல்லாதவராய் இருந்தும் கூட, தடுத்து வைக்கப் பட்டுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் பிணையும் இல்லாது தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள். 15 வருடங்களுக்கு முன்னர் மாட்டப்பட்ட படம் காரணம்.

இப்பொழுது இந்த மாணவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். பொலிஸ்கார முட்டாள் ஒருவன் மக்களைப் பார்த்துக் கேட்கிறான், ‘அறிவித்தல் தந்த பின்னர் வரும்போது கூட அந்தப் படத்தை அகற்ற வேண்டும் என்ற புத்திகூட உங்களுக்கு வரவில்லையா?’ என்று.

ஒரு பௌத்த சிங்கள மோடனின் எத்தனை பெரிய ஆணவப் பேச்சு! ஆனால், அந்தக் கேள்வியை முழு உலகமும் அவனுடைய மேலதிகாரியைக் கேட்கிறது என்பது, அந்த முட்டாளுக்குத் தெரிய வில்லை.

மூன்று தடவைகள் இந்தியா தமிழ் தேவாலயங்களையும், சில உல்லாசப் பயணிகள் விடுதிகளையும் குறிவைத்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தப் போகிறார்கள் என எச்சரித்தும், அவன் ஏன் இந்திய எச்சரிக்கைகள் பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை?

கற்பழிக்கும் காவல்துறை பேர்வழிகளுக்கு தமிழ் இளைஞர்கள்தான் 15 வருடங்களுக்கு அங்கிருக்க வேண்டும். 2009 தொடக்கம் அகில உலகமும் பயங்கரவாத தடைச் சட்டத்தை தவறு நீக்கு என ‘ஆண்டுவா’ வுக்கு சொன்னது, ஆனால், ஏன் அவர்களால் நீக்க முடியவில்லை? என யாருக்கும் தெரியாது.

இத்தகைய இரட்டை முறை இன அழிப்பிலிருந்து தப்பிக்கத் தமிழர்களுக்கு தனியாகப் பிரிந்து போவதைத் தவிர வேறு வழி இல்லை.’

**சிந்திப்போம் செயற்படுவோம்!**
**சந்திப்போம்!**




# அடுத்த தலைமையை அணி செய்வோம்!

மனோ

பாராளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்கும் அரசியல் கட்சிகளற்ற, தமிழ் மக்கள் தேசிய முன்னணி எனப்படும் ஒரு அமைப்பின் மூலம் தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும். இத்தகைய அமைப்பைத் தமிழர் நலனில் கள்ளம் கபடமற்ற கொள்கைப் பற்றைப் பலமுறை வெளிப்படுத்தும் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் விக்கினேஸ்வரன், கஜேந்திர குமார், பொன்னம்பலம், அனந்தி சசிதரன், கஜேந்திரன் போன்றவர்கள் முக்கிய பாகம் ஏற்று உருவாக்க வேண்டும். இன்னும் நன்றாக மக்கள் நலனில் தம்மை ஈடுபடுத்தி கொள்ள வேண்டும். அனைவரும் உறுப்பினர்களாகக் கொண்ட மத்திய கொள்கை வகுப்புக் குழு எல்லா அரசியல் நடவடிக்கைகளையும் திட்டம் இட்டுச் செயற்படுத்தும் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும்.

உறுப்பினர்கள் தனிக் கட்சி அடையாளங்களை ஒதுக்கி விட்டுத் தனி நபர்களாகவே இந்த அமைப்பில் இயங்க வேண்டும். ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களை எமது மக்கள் புறக்கணிக்க வேண்டும். இத்தகைய தேர்தல்களில் போட்டி போடும் எவருக்கும் இந்த அமைப்பில் உறுப்புரிமை வழங்கக் கூடாது. மீறிப் போட்டி போடும் எவரும் இந்த அமைப்பிலிருந்து விலகியதாக அல்லது நீக்கப்பட்டவராக கருதப்பட்டு, அமைப்பின் அனைத்துச் செயற்பாடுகளிலும் பங்கேற்க அனுமதிக்கப் படமாட்டார்.

இந்த அமைப்பில் சரி பாதி அளவுக்குக் குறையாத உறுப்பினர்கள் தொகை பெண்களாக இருக்க வேண்டும். இந்த அமைப்புக்கு தனிநபர் தலைமை இல்லாமல், 9 பேருக்கு குறையாத தலைமைப் பீடம் தலைமை தாங்க வேண்டும். சபையின் முடிவுகள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை சிங்களத்திடம் இருந்து மீட்டெடுக்க, 72 வருடங்களாகக் கட்டி எழுப்பிய அரசியல் தலைமை இன்று காட்டிக் கொடுக்கும் கபட அரசியலை கையும் களவுமாக முகத்திரை கிழிந்த கோலம் கண்டு, அகில உலகமே சாபம் கொடுக்கும் நிலையில் அம்மணப் பட்டு நிற்கிறது. எனவேதான் கட்சி அரசியல் பேசாத மக்கள், அரசியலை மட்டுமே செய்யும் அமைப்பாக இந்த அமைப்பை அகரம் விதந்துரைக்கிறது. துறைசார் நிபுணர்களின் அறிவும், ஆற்றலும் எமது மக்களின் எதிர் காலத்தை பொறுப்பு ஏற்று, வழி நடத்த முன்வரவேண்டும் என எல்லா தேசிய உயர்வாளர்களையும் வருந்திக் கேட்கிறது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், ரணிலின் அரசை ஆதரிக்காமல் வேறு என்ன செய்யலாம்? எனத் தமிழ் மக்களிடமே கேள்வி கேட்டுத் தமது கையாலாகாத் தனத்தை



**வலுவான தமிழ் மக்கள் தேசிய சபை உருவாக இவர்கள் ஒன்றாக வேண்டும்**

வெகுஇலகுவாகக் கை கழுவி விட்ட பின்னர், எந்த ஒரு அரசியல் கட்சியும் தமிழ் மக்களின் தலைமையை தாங்கும் அருகதையை இழந்துவிட்டன.

சம்பந்தனின் தொகுதியான திரிகோணமலையில், கின்னியா புனித வெந்நீரூற்றுத் தலமும், அங்குள்ள பிள்ளையார் ஆலயமும் இன்று சிங்கள பௌத்த காடையர்களின் சொத்துகளாக்கி விட்டன. காணாமல் போக்கடிக்கப் பட்டோரின் உறவுகளின் தாய்மாரும், மனைவிமாரும்

விடும் கண்ணீரும், கதறல் ஒலிகளும் சம்பந்தன் கண்களையும், காதுகளையும் சென்றடைய மறுக்கின்றன. யாருக்கு யார் ஆறுதல் சொல்வது? என்று தெரியாத அவலக் காட்சிகளையும் பார்த்தோம்.

இறுதிக் கட்டப் போரில் புலித் தலைமைகளைக் காட்டிக் கொடுக்க, சகல தொடர்புகளையும் துண்டித்து விட்டு, இந்தியாவுக்கு ஓடிச் சென்று, முட்டை இட்டு அடைகாத்து, 2010ல் திரும்ப எடுத்து வந்து மகிந்தரின் பின்னால் 21 தடவைகள் சுற்றிவந்தும், இட்டது கூழ் முட்டை குஞ்சு வராது எனத் தெரிந்து, சரத் பொன்சேகாவுக்கு சாமரம் வீசி, கையும் காலும் தளர்ந்து 2015 ஜனவரியில் ரணிலையும், மைத்திரியையும் சுமந்து, இன்று வரை காவடி ஆடியும், பிள்ளை எனச் சுமந்து திரிந்தும், கடைசியில் அது கற்பம் அல்ல, எல்லாமே சதைப் பிண்டம் எனத் தெரிந்ததும் வெளியில் சொல்லாமல், நலங்கு கலியாணம் நடத்துவோம் என்பதுபோல அரசியல் பேசுகிறார்கள்.

யாழ்ப்பாணம் வந்த ரணில், தேர்தல் காணிவல் விழாவைத் திறந்து வைப்பதுபோல பலாலி விமான நிலையத்தை, சர்வதேச விமானம் ஆக்குவதாக கூறிவிட்டுப் போயுள்ளார். அதன் பொழுது மதியூகியான சுமந்திரன் எங்களுக்கு அரசில் தீர்வுதான் முக்கியம் என அரசை முடிந்த வரை ஆதரித்து விட்டோம். 'இதற்கு மேலும் தாங்காது, இப்பொழுதே! இங்கேயே மக்கள் முன்பாக முடிவான பதில் வேண்டும்" என்று வேட்டுப் போட்டு விட்டு, தன்னைத் தானே மனதுக்குள் தட்டிக் கொடுத்து விட்டு இருந்து கொண்டார்.

தோல்விகளின் நாயகன், ஊழல் மன்னன், மோசடிகளின் சாணக்கியன் ரணில் பதில் கொடுத்தாராம் 'எல்லாம் தயார், நானும் தயார். ஆனால், பெரும்பான்மை ஆதரவு கிடைத்தால் உடனே செய்து தருவேன்" என்று. இது 'பைத்தியம் தீர்ந்தால் கல்யாணமாகும், கல்யாண மானால் பைத்தியம் தீரும்" என்கிற மாதிரி, முட்டாள் தனமான நிபந்தனை இல்லையா?

கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக எங்க வீட்டு மாப்பிள்ளைகளான அமிர்தலிங்கம், சம்பந்தன் ஆகிய இருவரும் கல்யாணத்துக்காக காத்திருந்து, தமிழ் மக்களைப் பலி கொடுத்து என்ன சாதித்தார்கள்? இப்பொழுது சுமந்திரன் புது மாப்பிள்ளை வேடம் போட்டு அலைகிறார். தமிழ் மக்களின் கதி என்னாகிறது?

இத்தகைய நிலையில் பாராளுமன்ற ஜனாதிபதித் தேர்தல்களால் தமிழினம் மீளா அடிமைத் தளையில் சிக்கிச் சீரழிந்து, அழிதல் கண்டுமா அவற்றின் மூலம் சிங்கள இனவாதக் கட்சிகளுக்குத் தீனி போடும் அரசியலைச் செய்ய வேண்டும்? தமிழராய் எழுவோம்! தனியாய் நிற்போம்! வாழ்க தமிழ்த் தேசியம்!!



GENERALI

**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
058 473 24 45 058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch



www.generali.ch
076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
### EINKOMMENS - VERSICHERUNGEN
வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
### SPARVERSICHERUNGEN
சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
### LEBENSVERSICHERUNGEN
உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
### FAHRZEUGEVERSICHERUNGEN
உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
### HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN
சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
### RECHTSSCHUTZVERSICHERUNG
ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
### KRANKEN & UNFALLVERSICHRUNGEN
அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி



### வீட்டுக்கடன்
### HYPOTHEKEN
உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை

எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்



பகுதி.23

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

- அவதானி

உளவு நிறுவனங்களில் பணிபுரியும் ஒற்றர்களை சாதாரண மனிதர்களிடமிருந்து வேறுபடுத்தி பார்க்க இயலாது. தாங்கள் உளவாளிகள் என்பதை அவர்கள் தங்களது உடல்மொழி மூலமாகவோ, பதட்டமான முக உணர்வுகள் மூலமோ காட்டிக் கொள்ள மாட்டார்கள்.

ஒரு நாட்டைச் சிதைப்பதற்கும், சீர்குலைப்பதற்கும் பலதிட்டங்கள் தேவைப்படுகின்றன. அவை காற்றிலே பரவும் நோய்க் கிருமிகள் போன்றிருக்கும். நோய்க் கிருமிகளை தாம் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம். நோய் கிருமிகள் தமது உடலின் தோலில் ஒட்டிக் கொண்டு விட்டன என்பதை அறியாது, படிப்படியாக நோய் வாய்ப்படும் மனிதர்களைப் போன்று, ஒரு நாடும் உளவு நிறுவனங்களால் சிதைக்கப்படுகின்றன.

உலகநாடுகளுக்கு தான்தான் எஜமான் என்பதை தொடர்ந்து நிருபித்து, அதனைத் தக்க வைப்பதில் வல்லரசு நாடு அல்லது வல்லரசு நாடுகள் அதற்கான திட்டத்தை வரைகின்றன.

இன்றைய உலகநாடுகள் வணிக வலையமப்பினால் சூழப்பட்டு விட்டன. தமது நாட்டு உற்பத்திப் பொருட்களை வணிக மயப்படுத்துவதற்காகவும், வலிமையற்ற நாடுகளை சிதைப்பதில் அந்நாட்டு உளவு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

பல்வேறுபட்ட விடயங்களுக்காக உலகநாடுகளின் தலைவர்கள் சந்திப்பதும், மகாநாடுகளை நடத்துவதும் வெறும் கண்துடைப்புக்காகவும், உலகமக்களை ஏமாற்றுவதற்காகவும் என்பது வெட்டவெளிச்சமான ஒன்றுதான். ஒவ்வொரு நாட்டினுடைய வெளிநாட்டுக் கொள்கையும், பிராந்திய ஆக்கிரமிப்புக் கொள்கையுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கின்றது.

பிராந்திய நாடுகளின் கூட்டமைப்பு என்ற பெயரில் நடத்தப்பட்டு, அதில் அங்கம் வகிக்கம் நாடுகளே கொள்கையளவில் மட்டும் ஒருமித்த நிலைப்பாட்டினைக் கொண்டிருந்த போதிலும், வணிகநிலையில் ஒரு நாட்டில் உற்பத்தியாகும் உற்பத்தி பொருட்களை அங்கம் வகிக்கும் நாடுகள் வாங்க வேண்டும் என்ற பண்டமாற்று அடிப்படையைக் கொண்டிருந்த போதிலும், உள்நாட்டு விற்பனையாளர்களாலும், வெளிநாடுகளிலிருந்து வாங்கப்படும் பொருட்களைப் போன்ற பொருட்களை தங்களுடைய நாட்டிலும் உற்பத்தியாக்கப் படுவதால் வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதியாகும் உற்பத்திப் பொருட்களை ஏன் வாங்க வேண்டுமென்ற உள்நாட்டு வணிகர்களால் ஒரு நாடு குழுமைத் தன்மையில் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றது.

இந்த பிராந்தியக் கூட்டமைப்புக்குட்பட்ட நாடுகளை தமது வசப்படுத்தி வைத்திருக்கும் வல்லரசு நாடு அல்லது வல்லரசு நாடுகள் முரண்பாட்டுச் சூழ்நிலையைப் பயன்படுத்தி நாடுகளுக்கிடையில் மனக் கசப்புகளைத் தோற்றுவிக்கின்றன.

இறக்குமதியாகும் உணவுப் பொருட்களின் தரத்தை குறைப்பது, அப்பொருட்களுக்குள் மனித உடலுக்கு தீங்கு விளைவிப்பதற்கான வேதியல் பொருட்களை கலப்பது போன்ற ஆபத்தான செயல்களைச் செய்கின்றன.

ஒரு நாட்டினுடைய பிற வளங்களைவிட மனித வளமே பிரதானமானது. இக்கருத்தை இத்தொடரில் வேறொரு இடத்திலும் தெரிவித்திருந்தேன்.

என்னதான் ஒருநாடு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீது பலகட்ட பரிசோதனைக் கூடாக வழிப்பாயிருந்தாலும்; “கண்ணுக்குள் எண்ணையை விட்டு” அவதானித்துக் கொண்டிருந்தாலும், அதையும் மீறி இறக்குமதிப் பொருட்களுக்குள் மனித உடலைச் சேதப்படுத்தும் வேதியல் பொருட்களை கலந்தனுப்புவதில் உளவு நிறுவனங்கள் பலரை விலைக்கு வாங்கி, தாங்கள் நினைத்ததைச் சாதித்துவிடுகின்றன.

ஒரு உளவு நிறுவனம் ஒரு நாட்டுக்குள் எப்படி அகலக் கால்களை வைக்கின்றது என்பது, மலங்க விழிக்க வைக்கும் விடயமல்ல.

இப்படி யோசித்தாலே போதும்” கலப்படம் சம்பந்தப்பட்ட செய்திகளில் மிளகில் கலப்படம், காயப் போட்ட பப்பாசி விதைகள் கலக்கப்பட்ட மிளகு கண்டுபிடிக்கப் பட்டது. சாயம் கலந்த மரத்தூசுகள் தேயிலையுடன் கலந்திருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. குத்தரிசிக்குள் ஆற்றுமணல் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது, அரிசிக்குள் பிளாஸ்ரிக் அரிசிகள் கலப்படம், இப்படிப்பல.

மேலே குறிப்பிட்ட கலப்படங்கள் எவ்வாறு உடலுக்கு தீங்கு விளைவித்து உயிராபத்தை ஏற்படுத்துகிறதோ? அது போன்றதே கண்ணுக்குத் தெரியாத வகையில் இறக்குமதிப் பொருட்களுடன் வேதியல் பொருட்கள் கலக்கப்படுகின்றன.

நோயுற்றிருக்கும் ஒருவருக்கு, அந்த நோய்க்கான மருந்தைக் கொடுத்தால் நோய் குணமடையும். அதே மருந்தை நோயில்லாத சுகதேகி பயன்படுத்தினால் உடலுக்கு பாதிப்பு ஏற்படும். இந்தப் பாதிப்பு உடனடியாக வெளிப்படா விட்டாலும் மெதுமெதுவாக அதன் பாதிப்பை உணர முடியும்.

இறக்குமதிப் உணவுப் பொருட்களில் வேதியல் பொருள் கலக்கப்படுமானால் அதனால் ஏற்படும் பாதிப்பு உடனடியாகத் தெரியாவிட்டாலும் மெதுவாகக் கொல்லும் விசமாக அது மாறுபடும்.

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களை அனுப்பி வைக்கும் முகவர் நிறுவனங்களிலேயே நாசகார வேலையை பணம், பெண், பொருள் என்பவற்றுள் ஏதோவொன்றை லஞ்சமாகக் கொடுத்து உளவு நிறுவனங்கள் செய்கின்றன.



CENTURY
TRAVELS GMBH

உங்கள் பயணங்களை இலகுவாக்க
எம்மை நாடுங்கள்!

direct booking number
Mobile : 0176 21682149

früh buchen ist günstiger

53kg
free

ஆசியாவின் அனைத்து
பாகங்களிலும் தங்குமிட வசதிகள்
செய்து கொடுக்கப்படும்

பல புதிய பரிணாமங்களோடு
விசேட விலைக் கழிவுடன்

Rheinische Str. 29
44137 Dortmund
Germay




Tel.: 0231 55 74 319
0231 58 96 557
Fax : 0231 58 44 665
Mob. : 0176 21682149

email : info@centurytravels.com
web : www.centurytravels.com

Gulf air 599€
31 Dezember
கையிருப்பு உள்ளவரை, குறிப்பிட்ட நாட்களில் மட்டும்

KLM & ETIHARD 499€
குறிப்பிட்ட நாட்களில் மட்டும்

இலங்கைக் கடவுச்
சீட்டைப் புதுப்பித்துத் தரவும்
மற்றும் இந்தியாவுக்கான
விசா பெற்றுத் தரவும்
உதவுவோம்

TKS BEST FOODS

DORTMUND மாநகரில்

மளிகை உலகின்

BIGG BOSS

5th ANNIVERSARY

# ஒரு நாள் மட்டும்!

விழாக்காலப் பிரமாண்ட விற்பனை....

# 05.10.2019

நீங்கள் நம்பமுடியாத மாபெரும் விலைச்சலுகைகள் மற்றும்

குலுக்கல் முறையிலான (நம்பமுடியாத) பரிசுப் பொருட்களும்.....!

## BIG SALE ONE DAY

100€ க்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கான குலுக்கல் முறையிலான பரிசில்கள்



இலங்கை/இந்தியா விமானச்சீட்டு



தொலைக் காட்சிப் பெட்டி



Mixer Grinder



Rice Cooker



புட்டுப் பானை


0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods

Rheinische Str. 79, 44137, Dortmund Germany